
www.padippakam.com

பெண்ணடிமை தீரர்மல்-மண்ணடிமை தீராது

# பெண் உரிமை

மார்ச் - எப் '99




படிப்பகம்

www.padippakam.com

# பெண் உரிமை

6 - 3

மார்ச்-ஏப்ரல் - 99

தனி சுற்றுக்கு மட்டும்

நன்கொடை
ரூ. 4.00

ஆண்டு சந்தா
ரூ. 30.00

வெளியீடு...
தமிழ்நாடு
பெண்ணுரிமைக் கழகம்

தொடர்புக்கு ....

அஜிதா
த.பெ. எண். 6937
கே.கே. நகர் தபால் நிலையம்
கே.கே.நகர்
சென்னை - 78

உள்ளே... பக்கம்


☞ பெண் உரிமைக்காக ........ 3

☞ தியாகிகள் கனவை நினைவாக்குவோம் ........ 5

☞ சந்தைமயமாக்கப்படும் கற்பழிப்பு 6

☞ பெண்ணியம் அணுகுமுறைகள் நூல் அறிமுகம் ........ 7

☞ பரிபூரணப்பெண் ........ 8

☞ ரத்தவெள்ளத்தில் மிதக்கும் பீகார் 12

☞ பாலஸ்தீன வீராங்கனை தலால் மோக்ரபி ........ 16

☞ புதுமையான போடோக்ஸ் ........ 19

☞ இந்துப் புராணங்களில் பெண்களின் பாத்திரங்கள் ........ 21

☞ ஜீன்ஸ் ........ 30

☞ ஆடுவோமே...பள்ளுபாடுவோமே. 31

☞ வாசகர் கடிதம் ........ 35

☞ இட்டலி மகிமை ........ 36


படிப்பகம்

www.padippakam.com

# பெண் உரிமைக்காக...

அன்பார்ந்த நண்பர்களே!

கடந்த ஓரிரு வாரங்களாக இந்தியாவின் வருங்காலப் பிரதமர் யாராக இருக்கும்? ஜெயாவா...? சோனியாவா...? டீக் கடையிலும், வழிப் பாதையிலும் எங்குத் திரும்பினாலும் விவாதிக்கின்றனர். பத்திரிக்கைகளும், தினசரிகளும் இந்திய அரசியல்வாதிகளைப் பற்றிய செய்திகளையும், கருத்துப் படங்களையும் வெளியிட்ட வண்ணமாக உள்ளன. மக்கள் தொடர்பு சாதனங்களோ, நாடாளுமன்ற பதவிச் சண்டையை ஒலிபரப்பி வருகின்றது.

இரண்டாண்டுகளுக்கு முன், 13 நாட்கள் மட்டுமே ஆட்சி செய்த பா.ஜ.க. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போய்விட்டதே என்று பரிதவித்தது. ஆனால், எப்படியோ கடைசியில் அடித்துப் பிடித்துக் கொண்டு சென்ற தேர்தலில் கூட்டணி மூலம் ஆட்சிப் பீடத்தை பிடித்த பா.ஜ.க, கிடைத்த ஓராண்டிலும் இந்தியாவை, இந்து மத பாசிச ஆட்சியை கொடூரமாக நிலைநாட்டப் பயன்படுத்தியது.

'இந்து, இந்தி, இந்தியா' என்பதையே இலட்சியமாகக் கொண்ட பி.ஜே.பி, ஆர்.எஸ்.எஸ், பஜ்ரங்தள் கும்பல் ஒரிஸாவில் கிருத்தவர்களைக் கொன்று தள்ளியது. கோவை.., சிறுபான்மை முஸ்லீம்களை கொன்று குவித்தது. முஸ்லீம், கிருத்துவப் பெண்களை கோவை, மத்தியப் பிரதேசம், மற்றும் குஜராத்தில் பாலியல் வன்முறை கொடூரத்திற்கு ஆளாக்கியது. கல்வி மாநாட்டிலும் சரஸ்வதி நாமம் பாடி தேச உணர்வு களை காலில் போட்டு மிதித்தது என்று பல வகையில் "மத சார்பற்ற நாடு" என்பதை அர்த்தமற்றதாக்கியது!

ஆட்சிப் பீடத்தைக் கையிலெடுத்த சில மாதங்களிலேயே. இந்திய மக்களை மட்டும் சுரண்டுவது போதாது என்று தெற்காசிய நாடுகளை வலை விரித்து தன் கைக்குள் வருவதற்கான பொக்ரான் அணு ஆயுத பரிசோதனை செய்தது. பீகாரில் பல தலித்து மக்கள் கொடூரமாக கொல்லப்பட்ட போது கவலைப்படாத, பி.ஜே.பி. மேல் சாதியினர் பண்ணையார்கள் தாக்கப்பட்டவுடன் பதறி அடித்துக் கொண்டு இராணுவ தளங்களை இறக்கி தன் ஆதிக்க வெறியை வெளிப்படுத்தியது பி.ஜே.பி!

அமெரிக்காவில் வரையறுக்கப்பட்ட பட்ஜெட்டை இந்திய மக்கள் மீது திணித்து புதிய பொருளாதாரக் கொள்கை, புதிய தொழிற் கொள்கை யால் விலைவாசி உயர்வு, தபால் தலை கட்டண உயர்வு , டீசல் விலை உயர்வு , கிராமப் பள்ளிகள் பஞ்சாயத்து வசம் விடுவது, இன்சூரன்ஸ் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களை தனியாரிடம் விடுவது, என்று பல மக்கள் விரோத செயல்பாடுகளை பி.ஜே.பி. செய்து வந்தது.

பெண்களை வீடு என்ற நான்கு சுவர்களுக்குள் முடக்கி வைக்க, "வீட்டு பராமரிப்பை" பாடத்திட்டத்தில் இணைப்பது, பெண்ணின் 'கற்பை' சந்தை பொருளாக்கி கற்பழிப்புக்கு இன்சூரன்ஸ் கம்பெனி நஷ்ட ஈடு கொடுப்பது போன்ற பெண்கள் விரோதத் திட்டங்களையும் அறிவித்தது பி.ஜே.பி.!



படிப்பகம்

www.padippakam.com

மேலும், காஷ்மீர், பஞ்சாப் போன்ற மாநிலங்களில் மக்களின் தேசிய இனப் போராட்டங்களையும், ஆந்திர, பீகாரில் புரட்சிகர விவசாயப் போராட்டங்களையும் இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கி ஜனநாயகத்தை காலில் போட்டு மிதித்து பாசிச சர்வாதிகாரத்தை நிலை நிறுத்தியது.

இப்படி 13 மாதங்கள் இந்தியாவை கொடூரமாக ஆண்ட பா.ஜ.க கூட்டணி ஆட்டம் கொண்டுவிட்டது கூட்டணிக்குள் குழப்பம்தான். உச்சக் கட்டத்தில் கத்தி முனை மீது நடந்த வாஜ்பாய் அரசு கவிழ்ந்தது. சில மாதங்களுக்கு முன்பே ஆட்சிக்குப் பல உட்பூசல்கள் வந்த தருணத்திலும் எப்படியோ பிழைத்து வந்த பி.ஜே.பி. தற்போது விஷ்ணு பகவத் விஷயத்தில் மாட்டிக் கொண்டது. கூட்டணிக்கு ஆதரவு அளித்த ஊழல் ராணி ஜெயலலிதா, விஸ்வரூபமெடுத்துள்ள விஷ்ணு பகவத் விவகாரத்தை, கையிலெடுத்துக் கொண்டார்.

இந்த விஷ்ணு பகவத் விசயத்தை கையிலெடுத்து கொண்டு இந்திய அரசியல் அரங்கில் மிகப் பெரிய புயலை கிளப்பினார். ஜெ.ஊழல் வழக்குகளை உடனடியாக நிறுத்தவும், தி.மு.க கட்சியை தமிழகத்தில் கலைக்கவும் வக்கற்ற பி.ஜே.பி அரசை கவிழக்க முடிவு செய்தார். இதை சாக்காகக் கொண்டு அரசை கவிழ்த்தால், எங்கே மக்கள் மத்தியில் தான் அம்பலப்படுவோமோ என பயந்த 'ஜெ' அகில இந்திய தலைவராகி விட்டார். பி.ஜே.பி ஆட்சியைக் கலைக்க, ஆகஸ்டு மாதத்திலே காங்கிரஸின் பொறுப்புக்கு வந்த 'போபர்ஸ்' புகழ் சோனியா வும், ஊழல் ராணியான 'ஜெ' வுடன் கூட்டுச் சேர்ந்து அரசியல் களத்தில் இறங்கினார்.

இவர்களின் ஆட்டத்தில் இந்திய மக்களின் இரத்தத்தை ஏகாதிபத்தியத்திற்கு பணயம் வைத்து விசுவாசமாக ஆட்சி செய்த பி.ஜே.பி, ஆட்சி, அதிகாரம் பறிபோயி விட்டதே என்ற சோகத்தில் மூழ்கி திளைத்துள்ளது. உடனே, மத்திய கட்சிகள் மாநில கட்சிகளின் தயவுக்காக ஏங்குவதும், மாநில கட்சிகள் தங்களின் காலடியில் விழுந்துள்ள தேசிய கட்சிகளை எட்டி உதைப்பது போல ஸ்டண்டு அடிப்பதுமாக பாராளுமன்றமே பதவி சண்டையில் நாறுகின்றது.

ஒவ்வொருவரும் பிரதமராக வேண்டும் என்ற மோகத்துடன் அடித்து மோதிக் கொண்ட இந்த பாராளுமன்ற பதவி சண்டையில் எந்தக் கட்சியும், எந்தக் கட்சித் தலைவரும் வெற்றியடைய இயலாததால், ஜனாதிபதி தேர்தலை அறிவித்துவிட்டார்! இத்தேர்தல் செய்தியை பார்த்தவுடன், ஓராண்டுக்கு ஒரு தேர்தல் என்றால், வரி பணமெல்லாம் தேவையில்லாமல் விரயம் ஆகுகின்றதே என்ற வேதனையில் தவிக்கின்றனர் இந்திய மக்கள்!

இந்த போலி ஜனநாயக தேர்தலில் நம்பிக்கையிழந்த மக்கள் இதுவரை 40-50 சதவிகிதத்தினரே வாக்களித்தார். ஆனால், இப்பொழுது நடந்த நாறடித்த பதவி சண்டைய பார்த்த பின்பு, இந்த எண்ணிக்கை மேலும் குறைய வாய்ப்புள்ளது. அதே போல், எந்த ஒரு கட்சியும் பெரும்பான்மை பெற இயலாமல், பெரும்பான்மைக்காக கட்சி களுக்குள் மோதிக் கொண்டு தற்காலிக இடைக்கால [ஓராண்டுக் கூட



படிப்பகம்

www.padippakam.com

நீடிக்குமோ?!] ஒப்பந்தத்தின் அடிப்படையில் கூட்டணிகள் ஆட்சி பீடத்தை பிடிக்கப் போகின்றது.

ஒன்று நிச்சயமாகிவிட்டது! இந்தப் பாராளுமன்ற நாடக மேடையில் யார் எந்தக் கூட்டணி ஆட்சிக் கட்டிலில் ஏறினாலும் இந்திய மக்களின், பெண்களின் வாழ் நிலையைப் பற்றிக் கவலைப் படமாட்டார்கள் என்பதை ஐம்பதாண்டு கால இந்திய வரலாறு நிரூபித்து விட்டது. மாறாக, ஆட்சிப் பீடத்தைப் பிடிக்கும் எந்தக் கட்சியும், மேலை நாட்டு எஜமானர்களுக்கும் அவர்களின் சிஷ்யர்களுக்கும் வால் பிடிப்பதும், அவர்கள் இந்திய நாட்டை கொள்ளையடிக்க நாட்டை அகல திறந்து விடுவதும், தானும் தங்கள் பத்து சந்ததியினர் ஏ.சி பங்களாவில் கால் மேல் கால் போட்டுக் கொண்டு சாப்பிட ஆட்சியில் நீடிக்கும் குறைந்த காலத்தில் அதிகபட்சமாக மக்கள் வரிப் பணத்தை ஏப்பம் விட்டு விட்டு டான்ஸி ஊழல், போபர்ஸ் ஊழல் என கொள்ளையடிப்பதும், புதுப்புது கொள்கையால் வேலையிழந்து, கல்வி கிடைக்காமல், விலைவாசி உயர்வால், பசி, பட்டினியால் அன்று வீதியில் இறங்கி போராட்டம் உரிமையென்று குரல் கொடுத்தால் நசுக்குவதும், ரன்வீர் சேனா போன்ற தனியார் இராணுவமும், காவல்துறையும் பெண்களை கற்பழிக்க முழு அனுமதி தருவதும், ... என்று எண்ணற்ற மக்கள் விரோத செயல்பாடுகளை செய்யும் என்பது உறுதி! இந்தியா மற்றொரு சோமாலியாவாக மாறுவதை தடுக்க வேண்டுமானால், பாராளுமன்ற பதவிக்காக நாய் சண்டை போடும் இந்த அரசியல் கட்சிகளை புறக்கணித்து வாழ்வுரிமையை மீட்டெடுக்க போராட்டம் இல்லாமல் போகாது துன்பங்கள் என்ற இலட்சியத்துடன் சமூக மாற்றத்துக்காகப் போராடுவதுதான் ஒரே வழி ஆகும்!

- ஆசிரியர் குழு

## தியாகிகள் கனவை நனவாக்குவோம்!

தியாகிகள் சிந்திய இரத்தத்தில்
தெளிந்து எழுந்த பெண்களின் பெண்ணின வீரர்களே!
இந்த மார்ச் 8 உழைக்கும் பெண்கள் தினத்தின்
பெருமையை சேர்க்க வாரீர்!
உடல் கருக உள்ளம் உருக உழைத்த உழைப்பாளிகளே!
பெண்ணின் விடுதலைக்கு உயிர்நீத்த தியாகிகளே!
நேற்றைய உங்கள் முயற்சிகளை
நாங்கள் செயல் படுத்துவோம் இன்று!
இது எங்கள் கனவு அல்ல!
என்றும் எப்பொழுதும் எங்கள் நினைவே!

- டானியா

(பன்னிரண்டாம் வகுப்பு மாணவி)



படிப்பகம்

www.padippakam.com

# சந்தை சரக்காக்கப்படும் ''கற்பழிப்பு''

கற்பழிப்பவனுக்குத் தூக்குத் தண்டனை என்று சில மாதங்களுக்கு முன் ஓலமிட்ட பி.ஜே.பி, ஆட்சி கட்டிலில் ஏறிய ஓராண்டு நிறைவை கொண்டாட 'ராஜ ராஜேஸ்வரி மஹிளா கல்யாண பீமா யோஜனா' என்ற திட்டத்தை அறிவித்து ஆனந்தக் கூத்தாடியது. அரசின் ஆசியுடன் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனியும் (ஜி.ஐ.சி) இந்த 'மகத்தான' திட்டத்தைத் துவக்கியது.

''பெண்களே உங்களைக் காப்பாற்ற எங்களால் முடியாது; ஆண்டிற்கு ரூ.15/– பிரிமியம் கொடுத்து உங்களது 'கற்பை' இன்சூர் (நஷ்டஈடு ஒப்பந்தம்) செய்து கொள்ளுங்கள்; கற்பழிப்பு நடந்தால் ஜி.ஐ.சி அதற்கேற்றவாறு நஷ்டஈடு கொடுத்துவிடும்'' என்பதுதான் பி.ஜே.பியின் 'ராஜ ராஜேஸ்வரி மஹிளா கல்யாண் பீமா யோஜனா' திட்டத்தின் சாரம்சம்.

மனிதனாக பிறந்தால் என்றாவது ஒரு நாள் இறக்க நேரிடும்; அது போல பெண்ணாக பிறந்தால் என்றாவது ஒருநாள் கற்பழிக்கப்படலாம். எனவே, அந்த நாளுக்காக இன்றே இன்சூரன்ஸ் கம்பெனியில் இன்சூர் செய்து கொள்ளுங்கள் என்று 10 முதல் 75 வயதான பெண்களுக்கு ஒரே வீச்சில் கற்பழிப்புக்கான விலையை நிர்ணயித்தது இந்த கேடு கெட்ட பி.ஜே.பி அரசு.

கொடூரமான உடல் காயத்திற்கும், மன வேதனைக்கும் இரையாக்கப்பட்ட பெண்ணை, ஏற்கனவே நீதிமன்ற வளாகமும், காவல்துறையும் கூட்டு சேர்ந்துக் கொண்டு பல கேள்விகளால் துளைத்து எடுத்தது பத்தாது குறைக்கு இத்திட்டப்படி இன்சூரன்ஸ் கம்பெனியும் தன் பங்கிற்கு, ''நீ கற்பழிக்கப்பட்டாயா... யாரால்...? எப்பொழுது...? உண்மையாக என்ன நடந்தது...? எப்படி நடந்தது...? காயங்கள் ஏதாவது உள்ளதா...? போலீஸில் வழக்கு பதிவு செய்துவிட்டாயா...? உனக்கு எவ்வளவு பணம் கொடுக்கலாம் என்பதை பார்க்கலாம்...! என்று பல ஆராய்ச்சிகளை செய்துவிட்டு கொடூரமான கற்பழிப்பை ஒரு தற்செயலாக நடந்த விபத்து போல் பாவித்து நஷ்டஈடு கொடுப்பது தானே இத்திட்டத்தின் நோக்கம்.



படிப்பகம்

www.padippakam.com

பணத்திற்காக எதையுமே செய்ய துணியும் இந்த சீர்கெட்ட சமூகத்தில், இத்திட்டபடி நஷ்டஈடு பணத்தைப் பெற ஏதுமறியா பெண் குழந்தைகள் கற்பழிக்கப்படும் அவல நிலைக்கு தள்ளப்படுவதும், உழைக்கத் தயாரில்லாத கணவன், மனைவியையே பணத்திற்காக நண்பர்களை விட்டு கற்பழிக்க உதவுவதற்கும் வாய்ப்பாக அமையும் இத்திட்டம் என்பதை நினைக்கையில் நெஞ்சு குமுறுகின்றதே.

பெண்ணை பாலியல் வன்முறை செய்யும் காட்டுமிராண்டிக் கயவர்களை தண்டிக்க வக்கற்ற பி.ஜே.பி. கற்பழிப்பை சந்தைச் சரக்காக்கிய இந்த 'ராஜ ராஜேஸ்வரி மஹிளா கல்யாண் பீமா யோஜனா' திட்டத்தை முறியடிப்போம்.

— சர்மிளா

---



## பெண்ணியம் - அணுகுமுறைகள்

[நூல் அறிமுகம்]

- நிர்மலா

Dr. பிரேமா பெண்ணியம் - அணுகுமுறைகள் என்ற புத்தகம் எழுதியுள்ளார். பொதுவாக இலக்கியம் முதல் இன்றுள்ள வார இதழ்கள் வரை பெண்களின் நிலை எப்படியெல்லாம் சித்தரிக்கப்பட்டுள்ளது என்பதை பிரித்து ஆய்வுக்குட்படுத்தியுள்ளது சிறப்பம்சம். இன்று பெண்களின் நிலையை ஒவ்வொரு கட்டமாக பிரித்துப் பார்த்து ஆய்வு செய்வதென்பது என்று யாரும் தெளிவாக செய்யவில்லை. அதுவும் பெண் எழுத்தாளர்கள் இம்மாதிரி ஆய்வு செய்தது குறைவே. பிரேமா அவர்கள் ஆய்வு செய்தது இன்றைய சூழலில் அவசியமானதும் கூட, அந்த வகையில் இக்கட்டுரைகளை எழுதியது சிறப்பம்சமே, எழுதிய விதம் கூட மிகவும் எளிமையாக உள்ளது.

இதுமட்டுமல்லாமல் பலவித பெண்கள் அமைப்புகள் ஒவ்வொரு விசயத்தையும் எப்படி பார்க்கிறார்கள் என்பதை வெளியிட்டிருப்பது சிறப்பம்சம். இருப்பினும், பல்வேறு தலைப்புகள் பற்றி விவரிக்கும் போது மிகவும் மேலோட்டமாக எழுதியுள்ளார், ஆசிரியர். இவர் என்ன நிலைபாடு எடுக்கிறார் என்பதை தெளிவுப்படுத்த வில்லை.

| | | |
|---|---|---|
| வெளியீட்டாளர் | : | தமிழ்புத்தகாலயம் |
| விலை | : | ரூ. 40.00 |
| கிடைக்குமிடங்கள் | : | தமிழ்புத்தகலாயம். |
| | | மூன்றில், கீழைக்காற்று |



படிப்பகம்

www.padippakam.com

# "பரிபூரணப் பெண்"

''சாந்தி! குழந்தை எப்போதும் அம்மா, அத்தைன்னுதான் சொல்லுது ஏன்?'' என்று சாந்தியின் கணவர் கோபமாக கேட்டார்.

''வேற என்ன சொல்லனும்?'' என்று சாந்தி கேட்டாள்.

''நல்லபடியா அப்பான்னு சொல்லலாமில்ல. குழந்தைங்க பிறந்தவுடனே அப்பான்னுதான் சொல்லணும். ஆனால். அம்மான்னுதானே சொல்லுது. இது ஒட்டுமொத்தமா பொம்பளைங்க எங்களுக்கு எதிரா செய்யற சதி.''

''குழந்தைகளுக்கு யாரை கூப்பிட்டால் வேலை நடக்கும் என்பது தெரியும். நீங்க பொண்டாட்டிய ஏமாத்தற மாதிரி குழந்தைகளை ஏமாத்த முடியாது.''

''இன்னையலிருந்து இதுக்கு அப்பான்னுதான் கற்றுத் தருவேன்''. குழந்தையை தூக்கி ''பாப்பா .....'' என்று சொல்ல துவங்கினார். குழந்தை மூன்று முறை ''ம்ம்ம்மா'' ன்று சொல்லி அழ ஆரம்பித்தாள்.

''பார்த்தீங்களா! அப்பான்னு சொன்ன உடனே அழுவுது'' என்று சொல்லி குழந்தையை தூக்கி கொண்டாள். உடனே சாந்தியின் கணவன் கோபமாக பார்த்தார்.

''இதோ பார்! நம்ம பொண்ணுக்கு உன்னுடைய புத்தியைக் கற்றுக் கொடுக்காதே. அதை சின்ன வயசிலிருந்தே 'பரிபூரணப் பெண்ணாக' வளர்ப்பேன்''. கம்பீரமாக சொன்னார்.

''பரிபூரணப் பெண் என்றால் யாருங்க?'' அப்பாவித் தனமாக கேட்டார் சாந்தி.

''நிச்சயம் நீ இல்லை'' இன்னும் கோபமாக சொன்னார்.

''அப்பாடா! ரொம்ப நன்றி'' சாந்தி சொன்னாள்.

''உங்க அம்மா உனக்கு எதுவும் கத்துக் கொடுக்காமல் வளர்த்துட்டாங்க உனக்கு கல்யாணம் நடக்கற வரையில் கோலம் கூட போடத் தெரியாதாமே!''

''இப்பக் கூட தெரியாது''

''தையல், கூடைப் பின்னுவது. பூ கட்டுவது கூட தெரியாதுன்னு அம்மா சொன்னாங்க.''

''அடடே! இந்த விசயங்களை இவ்வளவு சீக்கிரம் கண்டுபிடிச்சிட்டீங்களே'' என்று சாந்தி கூறினாள்.

சாந்தியின் கணவர் முறைத்துப் பார்த்தார்!

''எம்பொண்ண ,உன்னை மாதிரி இருக்க விடமாட்டேன். அவளை 'பரிபூரணப் பெண்ணாக' வளர்ப்பேன்.''

''ஓகோ! பரிபூரணப் பெண்ணுன்னா கோலம் போடறதும், தையலை தெரிஞ்சிக்கிறதும் தானா?'' என சாந்தி கேட்டாள்.



படிப்பகம்

www.padippakam.com

''அது மட்டுமல்ல, டான்ஸ், சங்கீதம், ஓவியம், இலக்கியம், வீட்டை அலங்கரிப்பது, தோட்ட வேலை, சமையல் எல்லாம் கத்துக் கொடுப்பேன் என் பொண்ணுக்கு'' என்று பெருமைப்பட கூறிக் கொண்டார் சாந்தியின் கணவர்.

''டான்ஸ்–ன்னு சொல்லிட்டா எப்படிங்க! இதுல பரதநாட்டியம், குச்சுபுடி, கதக்களி, கதக், மணிபுரி, மோகினி ஆட்டம்ன்னு, கத்துக் கொடுக்கனும். சங்கீதம்னா இந்துஸ்தானி, கர்நாடகம், கிராமியப் பாடல், இசைக் கச்சேரி, சினிமா சங்கீதம்..... ''

''அப்பா, என்ன வளவளன்னு பேசற'' என சாந்தியின் கணவர் சலித்துக் கொண்டார்.

'பரிபூரணப் பெண்ணுன்னா' சும்மாவா? எல்லாத்திலயும் பரிபூரணமா இருக்கனும். பாதிப் பாதியாக இருந்தா எப்படி?''

சிறிது நேரம் மெளனம்.

சாந்தி விரல்களை எண்ணிக் கொண்டிருந்தாள்.

''என் பொண்ணுக்கு எத்தனை கலைகளில் பயிற்சிக் கொடுப்பேன்னு எண்ணிக் கனவு காண்றியா''ன்னு சிரித்துக் கொண்டே கேட்டார்.

''சேச்சே! அது இல்ல. இத்தனை கலைகளை கத்துக்கனும்னா எத்தனை வருசம் ஆகும்னு யோசிச்சேன். எவ்வளவு குறைவா கணக்குப் போட்டாலும், 'பரிபூரணமா' கத்துக்கனும்னா 40 வயது ஆகும்....''

''ச்...சே! ஒரு பெண்ணை பரிபூரணப் பொண்ணா மாத்தரது ஒரு நல்ல மனைவியா ஆவதற்குத்தான். 40 வயசு வரைக்குமா கத்துக்கிட்டே இருக்கும். 25 வயசுலேயே எல்லாமே கத்துக்கும் என் தங்கம்!''.

''ஓஹோ! பரிபூரணப் பெண்ணுன்னா கல்யாணத்திற்கான பட்டம் போன்றதா? அப்படின்னா சீக்கிரம் எழுந்திரிங்க'' என்று அதட்டலாக கூறினாள்.

''எதுக்கு இவ்வளவு அவசரப்படற''

''பரதநாட்டியம் கத்துக்கறதுக்கு இப்பவே மாஸ்டற கூப்பிடனும். இப்பவே தொடங்கலைனா 25 வயதில எப்படி பரிபூரணப் பெண்ணாக மாறுவா? எந்திரிங்க! எந்திரிங்க!''.

குழந்தை ஸ்டூலை பிடித்து நடக்க முயற்சிக்கும் போது தவறிக் கீழே விழுந்து அழ ஆரம்பித்தாள். சாந்தி குழந்தையை தூக்கி ஆறுதல் சொன்னாள்.

''தா...தா...தக்கதை என குதிப்பென்னு அப்பா எல்லா ஏற்பாடும் செய்யறார். நீ என்னடான்னா கீழே விழுந்து அழுற இது தப்பில்ல?''

குழந்தையின் அலறலைக் கேட்டு பக்கத்து அறையிலிருந்து வெளிவந்தார் சாந்தியின் மாமியார்.

''இவ்வளவு நேரமாப் பார்த்திட்டுருக்கேன். இரண்டு பேரும் இங்கேயே இருந்துட்டு குழந்தையை அழ வச்சிட்ருக்கீங்க? எதுக்கு குழந்தைய அழ வச்சிட்டிருக்கீங்க?'' எனக் கேட்டார்.

''பரிபூரணப் பொண்ணு சின்ன வயசுல இப்படித்தான் அழுவா அத்தை!''



படிப்பகம்

www.padippakam.com

''பரிபூரணப் பெண்ணா? அவுங்க யாரு!'' குழப்பமாய் கேட்டார் மாமியார்.

''அய்யய்யோ! பரிபூரணப் பெண்ணுன்னா தெரியாதா? உங்க மகன்கிட்ட கேளுங்க. வயசுக்கு வந்தபிறகு உங்க பேத்தி அதாதான் ஆகப் போகுது.'' எனக் கூறினார்.

சாந்தியின் மாமியார் தன் மகனைப் பார்த்தார்.

''அம்மா! சாந்திப் பேச்சை நீ கண்டுக்காத. எம் பொண்ணுக்கு அவ புத்தி வரக்கூடாது. நீதான் அவளை வளக்கணும்மா.''

''குழந்தைகக்கு தாயின் தாக்கம் இல்லாம எப்படி வளர்க்க முடியும்'' என கேட்டார்.

''நான் நினைச்சா எது வேணாலும் செய்வேன். உன் மருமகளை நீ எப்படி தாங்கறியோ! கோலம் போடத் தெரியாது, சுவட்டர் பின்னத் தெரியாது, எம்ராய்டிங் தெரியாது. இந்த மாதிரி பொண்டாட்டியு நானா இருக்கிறதனால சகிச்சிக்கிறேன். என் பொண்ணையாவது பரிபூரணப் பொண்ணாக வளரணும்னு நினைக்கிறேன். அதனாலதான் என்று பெண்ணுக்கு எல்லாவித கலைகளையும் கற்றுக் கொடுப்பேன்.'' என ஆவேசமாக கூறினார் கோமலியின் கணவர்.

''ஓஹோ! சினிமா கதாநாயகி போல கத்துக்குடுக்கிறியா?''

''ஆமா! என் பொண்ணு எல்லாத்திலேயும் பரிபூரணத்துவம் சாதிக்கனும். ரோடுல போரவங்க, வரவங்க யார் இந்தப் பொண்ணுன்னு கேட்டா அந்த அப்பாவோட பொண்ணுன்னு பெருமையா சொல்லிக்கனும்.''

''அப்போ உன் கதாநாயகிக்கு எப்படிப்பட்ட கதாநாயகன் கிடைப்பான்னு யோசிச்சிப் பார்த்தியா?'' எனக் கேட்டார்.

சாந்தியின் கணவர் எரிச்சலடைந்தார்.

''நீ கூட இவ மாதிரியே பேசறியேம்மா? என் பொண்ணு பரிபூரணப் பொண்ணா மாறிட்டா மட்டும் போதாது. கணவன் எப்படிப்பட்டவனாலும் சகிச்சிகிட்டு போகனும். இல்லேன்னா மாத்திக்கனும்.''

''ஓஹோ... பரிபூரணத்துவம்னா சகிச்சிக்கிட்டு போற பெண்கள்னு அர்த்தமா? அப்படின்னா உலகத்தில் இருக்கிற அத்தனை பெண்களும் பரிபூரணப் பெண்கள்தானே! சரியானவங்க நீங்க...? இதுக்கு போய் டான்ஸ், சங்கீதம், குதிரை ஓட்டம்... இதெல்லாம் எதுக்கு கத்துக்கணும்'னு சாந்தி கேட்டாள்.

''அப்பப்பா! உனக்கு கொஞ்சம் கூட புத்தியே இல்ல சாந்தி! அதெல்லாம் தெரிஞ்சும் கூட அடக்கம், ஒடுக்கமா இருக்கிற பொண்ணுதான் பரிபூரணப் பொண்ணு. ஒன்னுமே தெரியாத பொண்ணு அடக்கமா இல்லாம என்ன பண்ணும். எல்லாம் தெரிஞ்சும் கூட, ஒரு பெரிய மனசோட புருஷனை மன்னிச்சு அடக்கமா நடக்கற பொண்ணுதான் பரிபூரணப் பெண். என் பொண்ண நான் அப்படித்தான் வளர்ப்பேன்.''

''இன்னும் பரதநாட்டிய மாஸ்டரையே கூட்டிட்டு வரல. எப்ப நீங்க ரெடி பண்ணுவீங்களோ? என்னமோ உங்களை பார்த்தா பாவமா இருக்கு! என்று கூறி பெருமுச்சிவிட்டாள் சாந்தி.



படிப்பகம்

www.padippakam.com

''முதல்ல உன் வளர்ப்பிலிருந்து அவ வெளி வந்தால் போதும். பரிபூரணத்திற்கு ஒரு சரியான வழி கிடைச்ச மாதிரி தான்!''

சாந்தியின் மாமியார் சந்தோஷமாக கைத்தட்டினார்.

''நல்லா சொன்னப்பா! சாந்தி வளர்ப்புக்கு, குழந்தையை தூரமாய் வைக்கணும். இல்லன்னா என் கனவுகள் எல்லாம் நாசமாகிவிடும். சரி ஒரு வேலை செய். இன்னையிலிருந்து குழந்தை வளர்ப்பு உன் பொறுப்புதான். ஒரு நிமிசம் கூட விடாம குழந்தைகக்கு எல்லா வேலையும் நீயே செஞ்சேன்னு வை... அது அம்மான்னு சொல்றத விட்டுட்டு அப்பான்னுதான் கூப்பிடும். யார் அதிகமா வேலை செய்தாங்களோ அவங்க தாக்கந்தான் குழந்தைக்கு வரும். சரி சரி சீக்கிரமா வா. குழந்தைக்கு ''செரிலாக்'' கலக்கணும், பாட்டில கழுவணும், 'நட நட' என்றுக் கூறிக் கொண்டே திரும்பி பார்த்தபோது மகனை காணவில்லை.

''எங்க போயிட்டான் அவன்?''

குழந்தையின் கைகளைப் பிடித்து நடக்க வைத்துக் கொண்டே சிரித்தாள் சாந்தி.

''பரிபூரணப் பெண்ணைப் பற்றி ஆராய்ச்சிக் கட்டுரை எழுத போயிருப்பார்'' என்று கூறினார்.

நன்றி – வார்த்தா (தெலுங்கு நாளேடு)

# பெண்

கல்லுடைத்து மண்சுமந்து
கால்கடுக்க வீடுதிரும்பி
கலயத்தை அடுப்பிலேற்றி
கஞ்சிக்கு வழிசெய்யணும்
கன்னியாய் பிறந்ததினால்
களைப்புக்கு இடமில்லை
காளையோ
மோட்டுவளையில்
கனக்கெடுப்பது ஓடும்
எலியோ
கூறையின் துளையோ.....?

ஓட... ஓட... உழைத்தும்
ஒட்டியிருக்கிற வயிறு
எட்டு ஐந்தாண்டு திட்டத்தில்
ஓர் எழவுகூட
எட்டவில்லை
எங்கள் குடிசைகளை

பெண்ணுக்கு ஓர்திட்டம்
கூட
பெரியதாய் ஒன்றும்
மாற்றிட்டவில்லை
தாய் தெய்வம்
ஜனிக்கும் தொட்டே
தாங்கிக் கொள்ள
கற்றுத்தரப் பட்டுவிட்டது.
உவமைப் போலவே
உண்மைகளும்.

- கோகிலா



படிப்பகம்

www.padippakam.com

# ரத்த வெள்ளத்தில் மிதக்கும் பீகார்

இந்தியாவிலுள்ள ஏனைய மாநிலங்களை விட சற்று மாறுபட்டது பீகார்! இம்மாநிலத்தில் பண்ணையார்கள் ஏராளமான நிலங்களை குவித்து கொண்டு குறிப்பிட்ட பகுதிகளில் குட்டி ராஜ்யத்தை நடத்தி வருகின்றனர். இப்பண்ணையார்கள் நிலமற்ற கூலி மற்றும் ஏழை விவசாயிகளின் [பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மக்கள்] உழைப்பை உறிஞ்சியே பிழைப்பு நடத்துகின்றனர். உழைப்பை விற்றே வாழ்க்கை நடத்தும் தலித்துகளின் நிலையோ கொடூரமாக உள்ளது! பண்ணையார் ஒருவர் சமீபத்தில் இந்தியா டுடேக்கு அளித்த பேட்டியில் "அரிஜன் களுக்கு ஒரு நாளைக்கு 3 கிலோ அரிசியும் அரை கிலோ உணவும் கொடுக்கிறோம். போதாதா? அவர்களுக்கு வேலை செய்ய வலிக்கிறது. செருப்பு போட்டுக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். எங்கள் வீடுகளை தாண்டி போகும்போது தலை வணங்காமல் போக வேண்டும் என்ற நினைப்பு அவர்களுக்கு இருக்கிறது" என்றுக் கூறியுள்ளார். இப்பேட்டியே பீகாரில் கூலி விவசாய மக்களின் [தலித்தின்] நிலையை விளக்குகிறதில்லையா? இது மட்டுமல்லாமல், பெண்களும் பாலியல் வன்முறை முதல் பல கொடூர ஒடுக்குமுறைகளுக்கு தினம் தினம் இரையாக்கப்பட்டு வருகின்றனர்.

பண்ணையார்கள் தங்களின் ராஜ்யத்தை நிலைநிறுத்த நிரந்தர பயிற்சி பெற்ற தனியார் இராணுவ படைகளை உருவாக்கியுள்ளனர். மேல்சாதி பண்ணையர்களின் பொருளாதார நிலவுடைமை நலன்களை பாதுகாக்க உருவாக்கப்பட்டவையே இத்தனியார் இராணுவப் படை. ரன்வீர் சேனா, பூமி சோனா, பிரமரிஷி சேனா, சன்லைட் சேனா, சவானி விடுதலை இராணுவம் என்று பல பெயர்களில் இந்த இராணுவம் செயல்பட்டு வருகின்றது. 1971 முதல் இதுவரை 59 படுகொலைகளில் 600 மக்களை கொன்று குவித்துள்ளது. இக்கூலிப்படைகள் 1992 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் மே வரை சவானி விடுதலை இராணுவம் நடத்திய 'கூட்டு கற்பழிப்பு' இயக்கத்தில் கயா மற்றும் ஜகனாபாத் மாவட்டங்களில் மட்டும் 6 முதல் 70 வயதான 200க்கும் மேற்பட்ட தலித் பெண்கள் பாலியல் வன்முறை செய்யப்பட்டுள்ளனர்.

ரப்ரி தேவி உட்பட இதுவரை பீகாரை ஆண் ஆட்சியாளர்கள் நிலமற்ற விவசாயிகளின் எழுச்சியை முடக்க இந்த தனியார் இராணுவத்தை தீனிப்போட்டு வளர்த்து வருகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

**பீகாரில்**

ஒவ்வொரு நான்கு விநாடிக்கு - ஒரு குற்றம்
ஒவ்வொரு இரண்டு மணி நேரத்திற்கு - ஒரு கொலை
ஒவ்வொரு மூன்று மணி நேரத்திற்கு - பணயத் தொகை கேட்டு கடத்தல்
ஒவ்வொரு ஆறு மணி நேரத்திற்கு - ஒரு பாலியல் வன்முறை

சமீபத்தில் ஜனவரி 25ஆம் நாளன்று, சங்கர் பிகா கிராமத்தில் ரன்வீர் சேனாவின் கொலை வெறி தாக்குதலுக்கு 9 குழந்தைகள், 5 பெண்கள் உட்பட 23 பேர் இரையாக்கப்பட்டு சங்கர்பிகா கிராமமே இரத்த வெள்ளத்தில் மிதந்தது. இத்தாக்குதலை புலனாய்வு செய்த அதிகாரியே "பெண்களையும், குழந்தை களையும் விட்டு வைக்கும் படுகொலைகளை பார்த்திருக்கிறோம், இச்சம்பவத்தில், அந்த கும்பல், இறந்தவர்கள் எண்ணிக்கை முன்பை விட அதிகமாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்து செய்துள்ளது' என்று கூறியுள்ளனர்.



இத்துடன் ரன்வீர் சேனாவின் இரத்த வெறி தாண்டவம் ஓயவில்லை. மீண்டும் பிப்ரவரி - 10ஆம் நாள் ஜகனா பாத் மாவட்டத்திலுள்ள நாராயணபூர் கிராமத்தில் இரவு 9 மணிக்கு 50-60 ரன்வீர் சேனா கும்பல் 12 தலித் மக்களை சுட்டுத் தள்ளியது.

ரத்த வெறியாட்டமாடிய ரன்வீர் சேனாவின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்க வக்கற்ற ரப்ரி தேவி அரசு இச்சமயம் தன்னுடைய ஆட்சிப் பீடத்தை நிலைக் குலைய வைத்து விடுமோ என்று பதறி அடித்துக் கொண்டு ரப்ரியும், லல்லுவும் சம்பவ இடத்திற்கு சென்ற போது "லல்லு - ரப்ரி திரும்பி செல்... நாங்கள் கொல்லப்பட்டபின் நீங்கள் ஆட்சியாளர்களாக இருப்பதால் என்ன பயன்?' என்று கோஷமிட்டு மக்கள் விரட்டியடித்தனர். சம்பவ இடத்திற்கு ஹெலிகாப்டரில் பறந்து வந்த சோனியா காந்தி, ஜார்ஜ் பெர்னான்டஸ் போன்ற அரசியல்வாதிகளை நாராயணபூர் மக்கள் துரத்தியடித்தனர்.

பீகாரில் விவசாய மக்கள் மீது ஏவப்படும் ஒடுக்குமுறைகளை எதிர்த்து புரட்சிகர அமைப்புகளின் தலைமையில் பெண்களும் தீரமாய்ப் போராடி வருகின்றனர். ஒடுக்கப்பட்டோரின் போராட்டங்கள் நிலவுடமை அடித்தளத்தை வீழ்த்தும் என்பது உறுதி!

- தேன்மொழி



படிப்பகம்

www.padippakam.com

# பாலஸ்தீன வீராங்கணை தலால் மோக்ரபி

(யாசத் அராபட் தலைமையில் நடந்த போராட்டம் தற்போது பின்னடைந்துள்ளது. புதிய புரட்சிகர தலைமையில் இன்றும் போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றது. பழைய யாசத் தலைமையில் நடந்த போராட்டத்தில் உயிர் நீத்த தலால் மோக்ரபியின் வாழ்க்கை சரித்திரத்தை பற்றி இக்கட்டுரை மூலம் அறிந்துக்கொள்ளலாம்.)

''எங்களுடைய பார்வையே வெடிகுண்டு
எங்களுடைய சிந்தனையே தோட்டாக்கள்
எங்களது தளர்வற்ற தன்னம்பிக்கையே உயிர்''

என்கின்ற கோஷத்தை முன் வைத்து பாலஸ்தீன மக்கள், அவர்களின் விடுதலை போராட்டத்திற்காக பல தியாகங்களை செய்து வருகின்றனர். இழந்துவிட்ட தாய்நாட்டை மீட்பதற்காக தீரத்துடன் பல போராட்டங்களை செய்கின்றனர். இலட்சியத்தை நிறைவேற்றுவதற்காக உயிர்நீத்த பாலஸ்தீனப் பெண்களுக்கு முதலில் வீரவணக்கம் கூறுவோம்.

1936– ல் பிரிட்டிஸ் ஆக்கிரமிப்பிற்கு எதிராக நடந்த வீரஞ்செறிந்த போராட்டத்தில் விட்டாலோ பாத்திமா கஜல் உயிர்நீத்தார். இவர் பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தின் முதல் தியாகி!

இன்று போராடுகின்ற மக்களுக்கு உற்சாகத்தை ஊட்டி இலட்சியத்தை நினைவுக்கூறுகின்ற மற்றொரு வீரப் பெண் தான் தலால் மோக்ரபி! லெபனான் அகதிகள் முகாமிலுள்ள பெண்களிடமிருந்து இங்கலாஸன்ட், ஜேம்ஸ் டென்னிஸ் ஆகியோர் சேகரித்த தகவல்களிலிருந்து தலால் மோக்ரபியை பற்றிய விவரங்களைத் தெரிந்துக் கொள்ளலாம்

மௌனாவின் அறைச் சுவரில் தலால் மோக்ரபியின் சுவரொட்டி ஒட்டப் பட்டிருந்தது. ஷாஹிரா அறையிலும் தலாலின் புகைப்படம் இருந்தது. தலாலின் புகைப்படம் அனைத்து இடங்களிலும் தெரியுமளவிற்கு இடம் பெற்றது. வீடுகளிலும், அலுவலகங் களிலும், பள்ளிகளிலும், கமாண்டர் ஜீப்பு களிலும் தலால் புகைப்படம் காணப் பட்டது. யாசத் அராபட்டிற்கு பின் முகாம் களில் அதிக அறிமுகமானவர் தாலால்



தலால் மோக்ரபி



படிப்பகம்

www.padippakam.com

மட்டுமே! 1978 மார்ச் – 11 வரை தலால் என்பவர் யார் என்றே தெரியாது. 1978, மார்ச் 11 அன்று துப்பாக்கிச் சூட்டில் கொடூரமாக காயப்பட்டு இறந்துவிட்ட ஒரு பெண்ணின் புகைப்படம் உலகம் முழுவதும் அச்சிடப்பட்டது. வெளிநாட்டுச் செய்தித் துறைகளும், டெலி பிரிண்டரும் ''பாலஸ்தீன தீவிரவாதிகளின் தளம் ஒன்று பைத்தியம் பிடித்த மாதிரி தாக்கியது, என்றும் தலால் இடம்பெற்ற புகைப்படத்தையும் அவரின் வயது 21 என்றும். அவள் லெபனானை சார்ந்த பாலஸ்தீனப் பெண்; அத்தீவிரவாத தளத்திற்கு அவள் தான் தலைமை'' என்றும் செய்தியை வெளியிட்டது.

வெளிநாடுகள் இத்'தீவிரவாத' செயலைக் கண்டித்தன. இஸ்ரேல் அரசிற்கு ஆதரவாக பல கடிதங்களும் வந்தது. ஆனால், பாலஸ்தீன முகாம்களிலுள்ள மக்கள் மிக மகிழ்ச்சியாக இருந்தனர். ஏனெனில் மதவாதிகளின் நகரங்களில் மிகவும் பெரியதும், இதயம் போன்றதுமான டெல் அமல் நகரத்தின் மீதான நேரடி தாக்குதலே இத்தாக்குதலைபற்றி மௌனா விவரிக்கையில், ''எங்கள் கமாண்டர்கள் இயந்திர துப்பாக்கியுடனும், கை துப்பாக்கியுடன் இஸ்ரேலை தாக்கிய ஒவ்வொரு முறையும் வெளிநாட்டு உலகம் எங்களுக்கெதிரான அறிக்கைகளை வெளியிடுகின்றது. ஆனால், இஸ்ரேல் எங்கள் முகாம்களின் மீது விமானங்கள், டாங்குகள், துப்பாக்கிப்படகுகளை கொண்டு தாக்கிய போது, ஆயிரக்கணக்கான பாலஸ்தீனியர்கள் முகாம்களை விட்டுச் சென்ற போது நூற்றுக்கணக்கான மக்கள் தோட்டாக்களுக்கும், வெடிமருந்து களுக்கும் இரையான போது ... அப்பொழுது எதிர் தாக்குதல் என்று சொல்வர். அப்பொழுது மட்டும் அது ஏன் தீவிரவாதமல்ல...? இஸ்ரேல், மேற்கு லெபனான் மீது தாக்குவதற்கு திட்டமிடுகின்றது என்பது எங்களுக்கு தெரியும். அவர்கள் எங்களை முழுக்க அழிக்க வேண்டும், என்று நினைக்கின்றனர். இஸ்ரேல் இத்தாக்குதலுக்கான முழுமையான ஏற்பாடுகளை செய்வதற்கு முன்பே அவர்களை தூண்டி விடுவது தான் இந்த டெல் அபில் தாக்குதலின் நோக்கம்'' என்று கூறினார். இத்தாக்குதலில் அவர்கள் வெற்றியடைந்தனர், மூன்று நாட்களுக்கு பின் இஸ்ரேல், மேற்கு லெபனான் மீது தாக்குதல் நடத்தியது.

டெல் அபில் சம்பவம் பாலஸ்தீனப் பெண்களுக்கு ஒரு முக்கியமான மைல் கல் போன்றது. ஏனெனில், அவர்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தில் எதிரி ஆக்கிரமித்த தாய் நாட்டில் நடந்த கொரில்லா போராட்டத்திற்குத் தலைமை தாங்கியது ஒரு பெண் என்பதே! மற்றொரு முக்கியமான விசயம் என்னவெனில், தலாலை தவிர எஞ்சியவர்கள் ஆண்களே ''நான் தலாலை போல இருக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்'' என்று பல பெண்கள் தலாலை வணங்குகிறார்கள். ''தலால் மிக சிறந்த மனிதர்'' என்று ஆண்கள் அவரை புகழ்வார்கள் . அவர் ஆண்களுக்கு சமமாக வேலை செய்வார்



படிப்பகம்

www.padippakam.com

என்கின்றனர். இன்று தலால் மோக்ரபி, பாலஸ்தீனியர்கள் பூஜிக்கும் தெய்வம்! அவரின் நினைவு இறந்த பின்பும் உற்சாகமூட்டக் கூடியதே ஆகும்.

''தலால் எங்கள் பார்வையில் மிகவும் பெருமைக்குரியவர். தலால் கமாண்டர் ஆவதற்கு முன்பே, பெண் கமாண்டராக இருக்க வேண்டும்' என்ற தலாலின் கற்பனையை பலர் கேலி செய்தனர். பெண்கள் போராட முடியாது என்று அவர்கள் கருதினர். சில ஆண்டுகளுக்கு முன், பெண்களும் படைத்தளபதியாக உருவாவதற்கு முயற்சிக்கின்றனரா என்று கேலி செய்தனர். பெண்கள் ஆயுதங்கள் கேட்டால் கொடுக்க மறுத்தனர். எனவே முயற்சி நிறுத்தப்பட்டது. ஆனால், பாலஸ்தீனத்தில் பெண் கமாண்டர்கள் இருந்தனர். பெண்களுக்கான பயிற்சி முகாம்கள் கூட இருந்தன. ஆனால், பயிற்சி முடிந்தவுடன் பெண்களை வீட்டிற்கு அனுப்பி விடுவர். அதனால் தான் இராணுவத்திற்கும் பெண்களுக்கும் சம்பந்தமில்லை என்ற அவநம்பிக்கை உருவானது. அவர்களின் தன்னம்பிக்கை அடிபட்டது. ஆண்களை விட பெண்கள் கீழானவர்கள் என்ற கருத்து மேலோங்கியது. ஆனால், பெண்களும் ஆண்களுடன் சமமாக போராட முடியும் என்பதை நிரூபித்தார் தலால்!

இந்த தலால் யார்? ஏனைய பாலஸ்தீனப் பெண்களின் கனவுகளை இவர் எவ்வாறு உண்மையாக்கினார்? தலால் மோக்ரபி கதை என்றாலே, தாய் நாட்டிற்காக, உரிமைக்காக போராடிய பெண்ணின் கதை என்பதுதான்

மேற்கு பீரட்டிலுள்ள சப்ரா முகாமிலுள்ள தலாலின் தாயை அவரின் வீட்டில் பார்த்தோம். வாயிற்படிக்கு அருகிலிருந்த சுவரில் தலால் மற்ற தள உறுப்பினர்களுடன் சேர்ந்து எடுத்த புகைப்படம் இருந்தது. நாங்கள் கதவை தட்டியவுடன் அவருடைய தாய் கதவை திறந்து தலாலின் புகைப்படங்கள் இருந்த அறைக்குள் எங்களை அழைத்துச் சென்றார்.

''தலால் மிகவும் சுதந்திரமானவள்'' என்றார் தலாலின் தாய். ''தான் நினைத்ததை செய்து முடிப்பவள்; என்மீது எனக்கு தன்னம்பிக்கை உண்டு என்று அடிக்கடி கூறுவாள். எங்களிடம் கூறாமலே எங்கோ செல்கின்றாள் என்று மட்டும் தெரியும், ஒரு நாள் அவளை பின்பற்றி சென்ற போது, கமாண்டர்களுக்கு நர்ஸாக பணிபுரிவதை பாக்க நேரிட்டது. படிப்பை பூர்த்தி செய்ய சொல்லி எவ்வளவோ கூறியதையும் நிராகரித்துவிட்டு, நான் மக்களுக்காக பாடுபடுவேன்; நான் புரட்சிக்காக செல்வேன்; அது பாலஸ்தீனியர்களின் முதல் கடமை' என்று அவர் கூறியதாக தலாலின் தாய் கூறிய போது கண்கலங்கினார்.

தலாலின் தாய் லெபனானைச் சேர்ந்தவர். தந்தைப் பாலஸ்தீனியர். தலாலின் தந்தை குழந்தைகளுக்கு எப்பொழுதுமே பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தைப் பற்றி பேசுவார். ஆனால், விடுதலைப் போராட்டத்தில் குழந்தைகள் இணைந்துவிட்டால், குழந்தைகளின் நிலை என்னவாகுமோ



படிப்பகம்

www.padippakam.com

என்று தாய் பயப்படுவார். தலால், பதாவில் தொலைபேசி இயக்குநரா- வேலை செய்து வந்தார். ஆனால், 1976–ல் சிரியா நாட்டவர்கள். லெபனானை தாக்கிய போது தலால், மலைகளிலிருந்துப் போராடினார். 1977–ல் இராணுவ பயிற்சிககுச் சென்ற போது, இராணுவ உயர் பதவிக்கான பரிட்சையில் (லெஃப்ட்னன்) பாஸாகிய அராபட் கையெழுத்திட்ட சான்றிதழை அனைவரிடமும் காட்டி பெருமையடைந்தார் தலாலின் தாய். அப்போதிலிருந்து மேற்கு லெபனான், கெரில்லா பகுதிகளில் வாழ்க்கையைத் தொடங்கினார் தலால். ''கெரில்லா வாழ்க்கையில் பல ஆண்களுடன் சேர்ந்து ஒரு பெண் தனியாக எப்படி வாழ முடியும்; நாலு பேர் என்ன சொல்வார்கள் என்று நான் சத்தமிட்டேன்'' என்று அவரின் தாய் எச்சரித்தாராம். அதற்கு தலால், ''கவலைப்படாதேம்மா; என் தோழர்கள் என்னை மதிப்பார்கள்'' என்றாராம்.

ஆனால், ஆண் தோழர்களின் மத்தியில் மதிப்பைப் பெற தலால் மிகவும் கடினப்பட்டார். தலாலுடன் பயிற்சி பெற்ற மௌனா ஸ்நேகிதன் காலேத் கூறும்போது, ''தலால் தன்னை கெரில்லா இயக்கத்தில் இணைத்து கொள்ள வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார். தயார் நிலையிலுள்ள அவரை வேண்டாம் என்று சொல்ல இயலாமல் கெரில்லா குழுவுடன் இணைத்துக் கொண்டனர். இதனால், அவர் பல கஷ்டங்களுக்கு ஆளாக வேண்டியிருந்தது. சில ஆண்கள் தலாலைப் பற்றித் தவறாகப் பேசிய சில வார்த்தைகள் எனக்கு நினைவுள்ளது, 'ஏழு மாதத்தில் கர்ப்பிணி ஆவாள்' என்றார் ஒருவர். 'எதற்கு, யாரால் கர்ப்பம் தரிப்பார்' என்று நான் கேட்டேன். யாரும் அவளுடன் தவறாக நடந்து கொள்ளக் கூடாது என்று கூறினேன். நாம் போராட வந்துள்ளோம். தலாலும் போராட வந்தவளே'' என்று கூறியதாக விளக்கினார்.

''தலால் ஒரு தனி அறையில் படுத்திருந்தாள்; அறைக்கு வெளியே அவளை பாதுகாப்பதற்காக சிலர் இருந்ததையும்; அவள் ஆண்களிடம் பழகும் விதத்தை பார்த்த பின்பும் தான் தனக்கு நம்பிக்கை வந்தது...' என்று தலாலின் தாய் கூறினார்.

தலால் இறந்தது எனக்கு எப்படி தெரியும் என்று உங்களுக்கு தெரியுமா? என்று கேட்டார் தாய். ''எங்களுடைய பெரிய மகள் ஒரு தினசரியை கொண்டு வந்தாள். இந்தப் படத்தைப் பார்! என்றாள் ஆமாம்! பாலஸ்தீனப் பெண் இறந்துவிட்டாள் என்றேன். அப்பெண்ணை அடையாளம் தெரியவில்லையா என்று கேட்டாள். நம்ம தலால் தான் என்றாள்! என் மகள் என்று தெரிந்தவுடன் அதிர்ச்சி ஆத்திரத்துடன் அழுதேன். சோகத்தின் அடையாளமாக கறுப்புத் துணியை அணிந்தேன். அப்பொழுது பக்கத்திலிருப்பவர்கள் பாலஸ்தீன ஆக்கிரமிப்பிற்கு பிறகு இது போன்ற சம்பவம் நடக்கவே இல்லை. இறந்தவர்கள் அனைவரும் சொர்க்கத்திற்கே செல்வார்கள்'' என்று கூறியதாக தலால் தாய் கூறினார். ஆரம்பத்திலிருந்தே தலால் குழுவின் உறுப்பினரான அஸாத்தின் குழு,



படிப்பகம்

www.padippakam.com

லெபனானிலிருந்து சமுத்திரம் வழியாக இஸ்ரேலை சென்றடைய இரண்டு முறை முயற்சித்த போது சிதோஷ்ண நிலை ஏதுவாக இல்லாததால் முயற்சி வெற்றியடையவில்லை. உடல்நிலை சரியில்லாத காரணத்தால் இறுதி வெற்றியில் அசாத் பங்கேற்க இயலவில்லை. எனவே நேரடி போராட்டத்தில் கலந்துக் கொள்ளும் வாய்ப்பு தலாலை போல் அசாத்திற்கு கூட கிடைக்கவில்லை.

தலாலைப் பற்றி அசாத் கூறுகையில் ''அவர் ஒரு தேசபக்தர். அவரின் அரசியல் வளர்ச்சி மிக அரிதானது. பாலஸ்தீனத்திற்கும், உலகிற்கும் உள்ள உறவை அவர் புரிந்துக் கொண்டவர். பாலஸ்தீன போராட்டம் உலக போராட்டத்தின் ஒரு பகுதி என்றே நம்பினார். எதிரியை தாக்கும் நேரத்தில் சக தோழர்களை மிகவும் உற்சாகமூட்டுவார். தாக்குதல் போது தோழர்கள் பிரிந்து சென்றால் தன்னம்பிக்கை இழந்து குழப்பமடைவர் என்பதால் யாரும் புரிந்து கொள்ளாமல் பார்த்துக் கொள்வார்'' என்று தலாலின் தன்மைகளை விளக்கினார்.

''தாக்குதல் வெற்றியடைய இக்கவனம் மிக அவசியமானது. நாங்கள் கடினமாக பயிற்சி அளித்தோம். நாங்கள் ஒவ்வொரு நிமிடமும் ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்திக் கொள்வோம். யார் யார் எப்படி இருப்பார்கள் என்பது நன்றாக தெரியும். எதிர்காலத்தை நினைத்தால் எங்களுக்கு பலம் வரும். எங்களின் இலட்சியங்களைப் பற்றி எங்களுக்குத் தெளிவாகத் தெரியும். எங்களுக்கு மரணமும், தற்கொலையும் மிகவும் விருப்பமானதாக வெளிநாட்டவர் கருதுகின்றனர். அது தவறானது. மரணத்திற்கான அர்த்தம் இருக்க வேண்டும். எங்களின் மரணம், யாதார்த்த வாழ்க்கைக்கும், பாலஸ்தீன மக்களின் வாழ்க்கைக்கும் வழிகாட்டும். நாங்கள் மக்களுக்காகவும், அடுத்த தலைமுறையினரின் நலனுக்காவும், 'நாட்டுக்காகவும் உயிரை கொடுப்போம். எதிர்காலத்திற்காக உயிரை தியாகம் செய்வோம். தாய்நாட்டிற்காக உயிரை கொடுப்பதை விட வேறென்ன இருக்கிறது'' என்று அஸாத் கூறினார்.

''நாங்கள் இரவு கிளம்பும்போது அறிக்கை பலகையில் ஏதாவது எழுத வேண்டும் என்று தலால் கருதிய போது ''பாலஸ்தீனா நாங்கள் வருகிறோம்'' என்று இரத்தத்தால் எழுதினோம். நிறுத்தப்பட்டிருந்த பலகையின் மீது ஏறுவதற்கு முன் 'நான் என் நாட்டிற்காக உயிர் கொடுக்க தயாராக உள்ளேன். அம்மா! கண்ணீர் விடாதே'' என்று தலால் எழுதியதாக அஸாத் கூறினார்.

தலாலின் வீர செயல்பாடுகளைப் பார்த்த சகோதரர்கள், பெற்றோர்கள், நாட்டு மக்கள் மிகவும் உற்சாகமடைந்தனர். அவரின் போராட்டப் பாதையில் நாமும் முன்னோக்கி செல்வோம் என்று கருதுகின்றனர்.

நன்றி – 'மஹிளா மார்க்கம்'



படிப்பகம்

www.padippakam.com

# புதுமையான - 'போடோக்ஸ்'

வெள்ளை முடியா ... கருமையாக்க மை போடுங்கள்! தட்டைமூக்கா - அழகு அறுவை சிகிச்சை மூலம் மாற்றுங்கள் ... உதடு சிவப்பாக இல்லையா - லிப்ஸ்டிக் பயன்படுத்துங்கள் ... சிவப்பு தோல் வேண்டுமா அழகு க்ரீம் சேருங்கள்.

இந்த வரிசையில் முக மடிப்புகளை, சுருக்கங்களை களைய வேண்டுமா - போடோக்ஸ் அழகிய நச்சு ஊசியை போட்டுக் கொள்ளுங்கள் என்ற புதிய விளம்பரத்தைப் பார்த்த 52 வயதான மேகி, தன்னுடைய நெற்றியிலுள்ள மடிப்புகளை களைந்து இளமையாக காட்சியளிக்க ஒரு டசன் போடோலியம் நச்சு ஊசியை போட்டுக் கொண்ட செய்தியை படிக்க நேரிட்டது.

இந்த போடோக்ஸ் நச்சு ஊசி தான் என்ன? முகத்தின் சுருக்கங்களை களைய கூட ஊசியா என்றக் கேள்வி எழுகின்ற தில்லையா? ஆம்! நவீன விஞ்ஞான வளர்ச்சி சமூக ஆக்கப் பணிகளுக்கு பயன்படுகிறதோ இல்லையோ, பெண்ணை கவர்ச்சி பொருளாக்க, பாலியல் பண்டமாக்க முழுமையாக பயன்படுகிறது என்பதே உண்மை!

புடோலியம் நச்சு ஊசியை பத்து நிமிடத்திற்கு முகத்தில் போட்டுக் கொள்வதால் நான்கிலிருந்து ஆறு மாதங்களுக்கு முகம் சுருக்கமின்றி, மடிப்பின்றி காணப்படுமாம். புடோலியம் ஊசி முகத்தில் குத்துவதால் முகம் மறுத்துபோயி புருவத்தை உயர்த்துவதோ, இயற்கையான முக அசைவுகளோ முகத்தில் இருக்காதாம்! கடந்த ஆண்டு மட்டும், 65000 நபர்கள் இந்த போடோக்ஸ் ஊசியை பயன்படுத்தியுள்ளனர் என்று அழகுணர்ச்சி ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை குழுவை சார்ந்த அமெரிக்கர் கூறியுள்ளார்.

அழகு என்ற பெயரில் கடைப்பிடிக்கப்பட்டு பெண்களின் உடல் நிலையை நாசம் செய்யும் பல்வேறு முறைகளில் ஒன்று தான் இந்த போடோக்ஸ் ஊசி! ஏற்கனவே, மார்பகங்களை பெரிதாக்க செய்யப்படும் அறுவை சிகிச்சைகளால், புற்றுநோய் போன்ற பக்கவிளைவுகளால், ஆயிரக்கணக்கான அமெரிக்கப் பெண்கள் துன்புறுகின்றனர். இந்த போடோக்ஸோ முகத்தின் தசைகளை செயலற்ற தாக்குவதுடன், பல மோசமான பக்க விளைவுகளையும் ஏற்படுத்துகிறது.

இதுபோன்ற அழகு ஆடம்பர பொருட்களை பயன்படுத்துவதால் மேல்தட்டு வர்க்கப் பெண்கள் அழகு மாதிரிகளாக உருவாகின்றனர். நடுத்தர வர்க்கப் பெண்கள் பெருமளவு அலங்காரப் பொருள்களை பயன்படுத்துவதன் மூலம் அவர்களை போல இருக்க முயற்சிப்பதும், கீழ்தட்டு மக்களோ தமது பங்கிற்கு விலைக் குறைந்த ஆடம்பர பொருள்களுடன் அழகியாக முயற்சிப்பதும் நடைபெறுகிறது. மொத்தத்தில், பெண்கள் தமக்கெதிரான அழகுமாயையை மனதில் சுமந்து கொண்டு, தமது விடுதலைக்கான கனவுகளை முளையிலேயே சாகடித்து விட்டு, தமது அடிமைத்தனத்தை விலைக் கொடுத்து வாங்க வித்தாக இருப்பதே இந்த அழகு ஆடம்பர பொருட்கள்!



படிப்பகம்

www.padippakam.com

பெண்கள் எப்போதும் இளமையாக இருக்க வேண்டும்; பெண் அழகாயிருக்க வேண்டும்; பெண் பாலியல் கவர்ச்சி கொண்டிருக்க வேண்டும் என்று பெண்களுக்கான அடிப்படை வரையறைகளை ஆணாதிக்கம் வரையறுத்ததன் வெளிப்பாடு தான் இது போன்ற செயல்பாடுகளுக்கு காரணமாக அமைகின்றது. இந்தக் கருத்துக்களை பெண்களுக்கு பாலுண்ணும் நாள் தொட்டு பாட்டியாகும் வரை இச்சீர்கெட்ட சமூகம் கற்றுக் கொடுக்கின்றது. பெண்ணை பாலியல் பண்டமாக சித்தரித்த நாள்தொட்டு இந்த பைத்தியக்காரத் தனமான கருத்துக்களை அடைய போட்டியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

யதார்த்தத்தில், பெண் அழகாயில்லையெனில், அவள் புறக்கணிக்கப்படலாம்; வயதானவளாய் தோன்றினால் கைவிடப்படலாம் போன்ற அழகுப் பற்றிய கருத்தானது பெண்ணுக்கு பெரும் சுமையாகவும், தடையாகவும் உள்ளது. ஆணாதிக்க வெறியர்கள் பெண்ணை அடிமையாக்க மிக முக்கிய ஆயுதமாகப் பயன்படுத்துவது இந்த 'அழகை' தான்.

அழகு என்ற கருத்தாக்கத்தால் பெண் தன்னை தானே அடிமைப்படுத்திக் கொள்வது மட்டுமல்ல; அடிமைத்தனத்தை நியாயப்படுத்தி போற்றிப் புகழ்வது மட்டுமல்ல தனது அடிமை தனத்திற்காக விலை கொடுக்கவும் வேண்டியுள்ளது என்பது தான் உண்மை!

- ஸ்வர்ணா

# அறிவு

கணவன் : ஏண்டி, கணக்கில சின்னவனுக்கு பூஜ்ஜியம் வந்திருக்கு.

மனைவி : ஏண்டா, கணக்கு பரிட்சைக்கு முன்பு அப்பாக் கூட சொல்லிக் கொடுத்தாரில்ல.

கணவன் : ஆ....ஆ... நான் சொன்னால் போதுமா அது அவன் மண்டையில ஏற வேணாம்.. பையத்தியக்காரப் பசங்க. ஒரு வேலைக் கூட ஒழுங்கா செய்யமாட்டாங்க. ச்சே.. இந்த பைத்தியக்காரியை கல்யாணம் பண்ணிக் கிட்டேன். அந்தப் பைத்தியம் பசங்களுக்கும் புடிச்சிடுச்சி.

கணவன் : ஏண்டி, இது தெரியுமா, பெரிய பையன் ப்ளஸ்–டூவில முதல் வகுப்பு பாஸ் பண்ணிட்டான்.

மனைவி : உண்மையாவா... கஷ்டப்பட்டதுக்கு பலன் கிடைச்சுருச்சி.

கணவன் : அவங்க யாருன்னு நினைக்கிற? அவங்க என் பசங்க, அதனால தான் அந்த அறிவு.

மனைவி : அது உங்க அறிவாங்க. என் பைத்தியம்ன்னு நினைச்சேன்.

கணவன் : ?!!...



படிப்பகம்

www.padippakam.com

# இந்துப் புராணங்களில் பெண்களின் பாத்திரங்கள்-இராமாயணம்

புராணங்கள் எல்லாவற்றிலும் இராமயணத்தின் தாக்கம் இந்திய நாட்டு மக்கள் மீதும், பெண்கள் மீதும் சொல்ல முடியாத அளவிற்கு இருக்கின்றது. மதவாதிகள் மற்றும் ஆட்சியாளர்கள் மக்கள் இராமயணத்தை மறக்காமல் இருப்பதற்காக திட்டமிட்டுஅதைத் தொலைக்காட்சி, வானொலி, சினிமா இன்னும் பல கலை வடிவங்கள் மூலமாக பரவலாக பிரச்சாரம் செய்கின்றன. ஆரம்பக்கல்வி முதல் பல்கலைக்கழகம் வரை, இராமாயணத்தில் உள்ள ஏதேனும்ஒருபகுதியை பாடத்திட்டமாக வைத்திருப்பதைப் பார்த்தால் இராமாயணத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது தெளிவாக தெரிகிறது. இராமாயணம் அரசியல் விஷயங்களில்கூட, முக்கிய பங்கு வகித்து, நாட்டில் உள்ள தேர்தல் கட்சிகளுக்கு கிடைத்த ஒரு அலாவுதீன் அற்புதவிளக்கு போலாகிவிட்டது.

இந்துமத வெறியர்களான பி.ஜே.பி மற்றும் அதனுடைய பிரிவு களான ஆர்.எஸ்.எஸ், வி. எச். பி, சிவசேனா, பஜ்ரங்கதள் போன்றவை இந்திய நாட்டுக்கு இராமராஜ்யம் மட்டும்தான் வழி என்று ஓலமிடு கின்றனர். பாபர் மசூதியை இடித்து ஆயிரக்கணக்கான மக்களின் மரணத்திற்கும், பெண்களின் கற்பழிப்புகளுக்கும் காரணமாக இருந்தது. சிறுபான்மை மக்களின் உரிமைகளை நசுக்கி, இந்துமதத்தை தூண்டிவிட்டு இந்திய நாட்டையே கதிகலங்க வைத்தது. 'இராமமந்திரம் இராமராஜ்ஜியம்" இவற்றை முதன்மையாகக் கொண்ட இராமாயணத்தில் உள்ள பெண் பாத்திரங்களைப் பற்றி பரிசீலிப்போம். முக்கியமாக இந்திய நாட்டில் நிலவுகின்ற சூழலின் சமுகப் புரட்சியை ஏற்றுக்கொண்டு, அந்தப் பாதையில் தொடர்ந்து பெண்கள் இயக் கத்தைக் கொண்டுபோக நினைப்பவர்கள், இராமாயணத்தில் பெண்கள் பற்றி குறிப்பாக இராமன் என்ற ஆண் பாத்திரத்தின் கண்ணோட்டம் என்ன என்பதை கட்டாயமாகப் புரிந்துக்கொள்ள வேண்டும். காலங்கால மாக பல கலைவடிவங்கள் மூலமாகவும், இலக்கியம் மூலமாகவும், மக்கள் மத்தியிலும் பெண்கள் மத்தியிலும் இராமாயணத்தில் உள்ள பெண்களின் பாத்திரங்கள் பற்றிய சில கருத்துக்கள்.

**கைகேயி** : இவள் பொறாமை பிடித்தவள் சண்டைக்காரி, பெரியவர் களின் பேச்சுக் கேட்காமல் கணவனை எதிர்த்தப் பாவம் செய்தவள். இராமரை காட்டுக்கு அனுப்பிய துரோகி சீதையின் துன்பங்களுக்கு காரணமானவள்.



படிப்பகம்

www.padippakam.com

**சீதை** : இவள் கற்புக்கரசி. மிகவும் பொறுமை குணம் உடையவள். கணவன் சொல்லுக்கு கட்டுப்பட்டு, இராமன் வைத்த அக்கினிப் பரிட்சையில் வெற்றிப்பெற்று, பெரியவர்களின் ஆசிப் பெற்றவள். இந்திய நாட்டுப் பெண்களுக்கு வழிகாட்டியாய் இருப்பவள்.

**தாடகி** : இவள் அரக்கி இனத்தைச் சேர்ந்தவள். பார்ப்பதற்கே கொடுரமானவள். இரத்த மாமிசங்களைக் கொண்டுவந்து யாகங்களை தடைசெய்து பிராமணர்களை கேலிக்குள்ளாக்கியவள்.

**சூர்பணகை** : இவ்ள் அரக்கி இனத்தைச் சேர்ந்தவள் மிகவும் அசிங்கமாக இருப்பவள். இராமருடைய ஏகபத்தினி விரதத்தை மழுங்கடிப்பதற்கு திட்டமிட்ட காமப்பிசாசு.

மேற்கண்ட கருத்துக்கள் உருவாவதற்குக் காரணம் அன்றிலிருந்து இன்றுவரை தொடர்கின்ற ஆணாதிக்க சமூகத்தின் நீதி திட்டமிட்டே செய்கின்ற சதிதான். இராமாயண காலத்திலுள்ள சமூக, அரசியல், பொருளாதார கலைவிஷயங்களைப் புரிந்துக்கொண்டால் மேற்கண்டப் பாத்திரங்களைப் பற்றிய அந்த ஆணாதிக்க சமூகத்தின் சதி வெட்ட வெளிச்சமாகத் தெரியும்.

இராமாயணகாலம் உருவாவதற்கு முன்பே வர்க்கங்கள் தோன்றி இருந்தன. இராமாயணக் காலத்தில் முரண்பாடுகளெல்லாம் சுரண்டப்படுபவனுக்கும், சுரண்டுவோர்க்கும் இடையில்தான். ஒரு வர்க்கம் மற்றொரு வர்க்கத்தைச் சுரண்டி சொத்தைச் சேர்ப்பது. தனியுடமை அடித்தளமாகக் காணப்பட்டன. பலதார மணமுறைக் கூட சில இடங்களில் அமுலில் இருந்தன. ஒரு புறம் உணவு உற்பத்தி, மறுபுறம் உணவு சேகரிப்பது பிரதானமாக இருக்கின்ற. இந்த சமூகத்தில் நிலப் பிரச்சனை முக்கியமானது. பசுக்கள் மிகவும் பரவலாக வளர்க்கப்பட்டன. இந்த உற்பத்தி முறைக்கு இயற்கை சாதகமாக இருந்தது, இந்தக் காலத்தில் பார்ப்பனர் ஆதிக்கம்தான் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. ஆட்சி, அதிகாரம், அரசு, மதம், பண்பாடு, குடும்பம், திருமணம் போன்ற விஷயங்கள் முக்கியமாக பார்பனர்களால் தீர்மானிக்கப்பட்டன. மக்கள் அரசர்களுக்கு கட்டாய வரி செலுத்த வேண்டும், ஆனால், மக்களுக்கு எந்தவித அடிப்படை வசதியும் அங்கு இல்லை.

அரசர்கள் கட்டளையிட்டு, மக்களிடமிருந்து அவர்களின் உழைப்பையும், உணவுப் பயிர்களையும், பசுக்களையும் பணத்தையும் வரியாக வசூலித்து அவ்ற்றை தங்களின் வ்ிருந்துகளுக்கும், உல்லாசங களுக்கும், யுத்தங்களுக்கும் செலவிடுவார்கள். இராணுவம் மக்களை அடக்குவதற்கும் எந்த நேரமும் மக்களைக் கண்காணித்து அவர்களை கொடுமைபடுத்துவதற்கே தவிர மக்கள் நன்மைக்காக இருந்ததில்லை.



படிப்பகம்

www.padippakam.com

பார்ப்பனர் ஆதிக்கத்தையும், அரசையும் எதிர்த்த பழங்குடி மக்களை இராட்சசர்களாகவும், மோசமானவர்களாகவும் சித்தரித்து இருந்தார்கள். அவர்கள் கல்வியை பார்ப்பனர்களும், அரசர்களும் மட்டும்தான் கற்க வேண்டும் என்றும் மற்றவர்கள் பயிலக்கூடாது என்றும் தடையை விதித்துள்ளனர் பார்ப்பனர்கள். அன்றிருந்த அரசர்கள் பார்ப்பனர்களின் துணைக்கொண்டு ஏழை வர்க்கத்தையும், பெண்களையும் தடையின்றி அடக்கி வந்தனர். அன்றுள்ள சக்கரவர்த்திகள் கூட பார்ப்பனர்கள், முனிவர்கள் ஆகியோரின் ஆதிக்கத்தை ஏன் என்று மறுபேச்சு பேசாமல் அவர்கள் காலைத் தொட்டு வணங்கி அவர்களுக்கு கோபம் வராத அளவிற்கு பணிவிடை செய்வார்கள்.

அன்றுள்ள பார்ப்பனர்களின் கண் அசைவிலேயே ஆட்சி, அதிகாரம், அரசு, மதம், பண்பாடு, குடும்பம், திருமணம், போன்றவை மீதான கட்டுப்பாடு இருந்தன. திருமணமுறை, பெண்கள் எப்படி இருக்க வேண்டும், குடும்பம் எப்படியிருக்க வேண்டும் என்பனவற்றை ஒரு திட்டத்தின்படி தயார் செய்து பரவலாக பிரசாரம் செய்து, அதை நடைமுறைப் படுத்தச் செய்தனர். சிறுவயதிலிருந்தே பெண்களின் மனதில் ஆழமாக பதியும்படி நோன்பு பதிவிரதக் கதைகள், பூஜைகள், கணவனை எப்படி பராமரிப்பது, பெரியவர்களிடம் எப்படி நடந்துக் கொள்வது, யாரை திருமணம் செய்துக் கொள்ள வேண்டும் என்று தீர்மானிப்பது போன்ற பெண்ணடிமைக் கருத்துக்களை பாலுட்டும்போதே ஊட்டி வளர்த்தனர் பெரியவர்கள்.

மேற்படி சொன்ன சதித் திட்டத்திற்கு அஸ்திவாரமாக அமைந்திருப்பது ஆஸ்ரமங்கள்தான். இப்படியாகத்தான் இராமாயணக் காலப் பண்பாட்டை புரிந்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால், இராமாயணப் பண்பாட்டை பாரதப் பண்பாடாக இன்றுள்ள இந்துமத வெறியர்கள் மற்றும் ஆட்சியாளர்கள் சித்தரிக்கின்றனர். பார்ப்பனிய ஆதிக்கத்தையும், அரசர்களின் இராஜ்ஜியத்தையும் உயர்த்திப் பிடித்து ஏழைகளை அடக்கிய மக்கள் விரோதப் பண்பாடு இராமயாணக் காலந்தொட்டே உள்ளது. அனைத்து வகைகளிலும் பெண்களை முற்றிலுமாக அடக்கி குடும்பத்தில் பெண்ணைப்பிரதானமாக்கிய ஆணாதிக்கப் பண்பாடு அந்தக் காலந்தொட்டே இருந்து வந்துள்ளது. பெண்களை பலியாக்கி, அக்னிப்பிரவேசம் செய்ய வைத்து, அவர்களின் மூக்கையும், காதையும் அறுத்துவிட்டு, தற்கொலைகளுக்கு வழிகாட்டிய கேவலமான நச்சுப் பண்பாடு அன்றே இருந்தது. பார்ப்பன ஆதிக்கத்தையும் அரசையும் எதிர்த்த பழங்குடிகளை மோசமானவர்களாக சித்திரித்த கேவலமான பண்பாடு அன்று இருந்தது.

இந்த அடிப்படையிலிருந்து மேற்கண்ட நான்கு பெண் பத்திரங்களை



படிப்பகம்

www.padippakam.com

இலக்கியல் கண்ணோட்டத்திலிருந்து பரிசீலிப்போம்.

காந்தார நாட்டு மன்னன் கீசகரின் மகள் கைகேயி. இவள் இளவரசி என்பதால் சொத்து அதிகமாக இருந்தது. அனைத்துத் துறைகளிலும் திறமை பெற்று விளங்கினாள். குறிப்பாக வில் வித்தையும், தேர் ஒட்டும் திறமையும் கொண்ட வீரம்மிகுந்த பெண்ணாக இருந்தாள். இவள் தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ள முடியும். கேள்வி கேட்கும் திறமை கொண்டவள். தொலைநோக்கு, அரசியல் திறமைக் கொண்டவள், யார் எது சொன்னாலும் கொள்கை தான் அவளின் குறிக்கோள். இந்தக் காரணங்கள்தான் இவளின் தனித்தன்மையாக வளர்ந்தது.

அயோத்தியில் இராஜாங்கத் திட்டத்தின்படி பட்டத்து இராணிக்குப் பிறந்த மகனுக்குத்தான் பட்டாபிஷேகம் நடக்கும். ஒரு சமயம் யுத்தம் நடக்கும் தருணத்தில் கைகேயி தசரதன் அபாயத்திலிருந்து காப்பாற்றும் பொழுது அவளுக்கு இரண்டு வரங்கள் கொடுப்பதாக வாக்களித்தார். இராமருக்கு பட்டாபிஷேக ஏற்பாடுகள் நடக்கின்ற தருணத்தில் இவ்விரு வரங்களை தருமாறு கேட்டாள். முதல் வரம் பரதனுக்கு பட்டாபிஷேகம் நடத்தவும், இரண்டாவது இராமரை 14 வருடங்கள் காட்டுக்கு அனுப்பவும் கேட்டாள். இந்த இரண்டாம் கோரிக்கைத்தான் கைகேயினுடைய அரசியல் திறமையும், நீண்ட கண்ணோட்டத்தையும் காட்டுகிறது.

பரதனுக்கு எல்லா வகைகளிலும் எதிரி இராமர்தான். அயோத்தியிலேயே இராமர் இருந்தால் பதவி மோகம் வந்து பரதனின் ஏற்பை எதிர்க்கக் கூடும் என்ற தனது அரசியல் சாதுர்யத்தினால் தான் கைகேயி இராமரை வனவாசம் அனுப்பக் கோரினாள். அச்சூழலில் அனைவரும் பல வகைகளில் எதிர்ப்பை தெரிவித்தும் கூட அவளை அசைக்க முடியவில்லை. பொறாமையும், சூழ்ச்சியும் கொண்டவள் என்றும், மோசமனவள் என்றும், கணவனின் உறவினர்கள் விமர்சித்தும் கேட்காத பிடிவாதக்காரி என்றும் கூறப்படுகிறாள். அவளின் ஒரே இலட்சியம் பரதன் இளவரசன் ஆவது, தான் இராஜமாதாவாக இருப்பது. அரசு - இராஜாங்கம் - அரசியல் இவை முழுக்க ஆண்களின் சாம்ராஜ்யம். அதற்குள் நுழையவோ அல்லது அதைப்பற்றி பேசவோ சிந்திக்க முடியாத ஒரு திட்டமிட்ட தந்தை வழி சமூகத்தில், கைகேயி அன்றுள்ள அயோத்திய அரசியலை தலை கீழாக்குவதைப் பார்த்தால் இவளின் தனித்தன்மையின் தன்மையைப் புரிந்துக் கொள்ளலாம். அன்றுள்ள மத தர்மங்களுக்கும், பத்தினி சூத்திரங்களுக்கும், குடும்ப கடமைகளுக்கும் மாறாக கைகேயி பாத்திரம் இருந்து உள்ளது. ஆகையால் சகஜமாகவே பார்பனர்களாலும், மற்றும் அரசர்களாலும் சீரணிக்க முடியாமல் அவர்களின் எதிர்ப்புக்கு ஆளானது கைகேயி பாத்திரம். ஒரு திட்டத்துடன்தான் கைகேயி பாத்திரத்தை வக்கிரமாகவும், மோசமானவளாகவும், பொறாமை இருப்பவளாகவும்,



படிப்பகம்

www.padippakam.com

பாவம் செய்தவளாகவும் பிரசாரம் செய்தனர். யாராவது இது போன்ற செயல்கள் செய்தால் இதே கதிதான் என்று சொல்லாமல் சொல்வதுதான் இந்த தவறான பிரச்சாரம். இந்திய நாட்டுப் பெண்களுக்கு வைத்த பெயர்களைப் பார்த்தால் சுமித்ரா, கௌசல்யா, சீதை போன்ற பெயர்கள்தான் இருக்கின்றன. கைகேயின் பெயர் தேடினாலும் கிடைக்காது. இப்படி கைகேயி பெயர்கூட தீண்டதகாததாக ஆக்கிவிட்டனர்.

சீதை ஜனகரின் வளர்ப்புமகள் ஆவாள். பிறந்தது முதல் மற்றவர்களின் தயவால் வளர்ந்ததால் அடிபணிந்து போகும் தன்மை அதிகமாக இருந்தது. பொருளாதார ரீதியாக சுதந்திரமில்லாதவள். பூஜை, விரதங்கள், பதிவிரதக் கதைகள் சிறுவயதிலிருந்தே கற்றுக்கொடுக்கப் பட்டதால், கணவன்தான் எல்லாம் என்று நினைத்தாள். இக்காரணங்களால் இவளின் தனித்தன்மை வளரவில்லை. இராமரைத் திருமணம் செய்துக் கொண்டு அயோத்தியில் **(புகுந்த வீட்டில்)** கால் வைத்தாள். அங்கு சீதைக்கு மாமியார், மாமனார், மச்சினர்கள், இன்னும் இதர குடும்பத்தினர்களின் எண்ணிக்கை அதிகமாய் இருப்பதால் பணிவு இன்னும் அதிகமானது. பதினான்கு வருடங்கள் காட்டிற்கு இராமருடன் போவதற்கும் பிடிவாதம் பிடித்தாள்.

இங்கு ஒரு விஷயத்தை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இராமருடன் போவதற்கு அவள் சிறு வயதிலிருந்து கேட்கின்ற பதிவிரதக் கதைகள் ஒரு காரணம். மற்றொரு காரணம், சீதை இளவரசியுமல்ல, சொத்தும்கிடையாது. இவள் இச்சூழலில் கணவனை ஒட்டிக் காட்டிற்குப் போகாமல் பிறந்த விட்டிற்குப் போனால் ஆதரிப்பார்களோ என்ற சந்தேகம். ஏனென்றால், ஜனகன் பெற்ற தகப்பன் இல்லை. அப்படி இல்லை என்றால் புகுந்த வீட்டில் இருக்கலாமென்று நினைத்தால் மாமியார்கள், மச்சினர்கள் மற்றவர்கள் தன்னை மதிப்பார்களோ இல்லையோ என்ற தயக்கம். அடிமையாக அவர்களை சேவிப்பதைவிட காட்டிற்குப் போவதே மேல் என்று நினைத்து இராமருடன் கிளம்பினாள். இதே விஷயத்தில் லஷ்மணனின் மனைவி ஊர்மிளா பாத்திரத்தைக் கவனிப்போம். இராமருடன் 14 வருடங்கள் சீதை காட்டிற்குப் போவதற்கு கிளம்பினாலும், இலஷ்மணனின் அடிமைத் தனத்தை வெறுத்து, ஊர்மிளா உடன் போகவேயில்லை. இந்தப் பாத்திரம் சீதைப் பாத்திரத்திற்கு முழுக்க மாறாது.

சீதை முழுக்க இராமரைச் சார்ந்துதான் இருப்பாள். இராவணன் சீதையை கடத்திச் சென்றபிறகு இராமர் வானரச் சேனையின் உதவியுடன் யுத்தம் செய்து சீதையை விடுவிப்பார். இராமர் சீதையின் கற்பை சந்தேகப்பட்டு அதை நிருபிப்பதற்காக அக்னிப் பிரவேசம் செய்யச் சொல்வார். அந்தக் காலத்தில் அக்னி அனைத்தையும் பவித்திரமாக்கும் என்ற நம்பிக்கை இருந்ததால் சந்தேகப்பிறவியான இராமர் சீதையை



படிப்பகம்

www.padippakam.com

அக்னிப்பிரவேசம் செய்யச் சொல்வான். உண்மையில் சீதைப் பாத்திரம் இயல்பாகவே அன்றுள்ள தந்தைவழிச் சமூகத்தில் உள்ள சம்பிரதாயங்களைத்தான் சுற்றிச்சுற்றி வந்தது இறுதியில் சீதை இராமரின் கட்டளைப்படி பிரவேசம் செய்யவில்லை என்றால் கூட, அதற்குச் சம்பந்தப்பட்ட ஒரு கடின பரிட்சைக்கு ஆளாகியதாகப் புரிந்துக் கொள்ளலாம். அயோத்திக்குப் போனபிறகு கர்ப்பமான சீதையை காட்டிற்கு மீண்டும் அனுப்பினார் இராமர். குறைந்தபட்சம் கர்ப்பமானவள் என்றுகூட பாராமல், மனிதாபிமானமே இல்லாமல் பொய் சொல்லி ஏமாற்றி காட்டிற்கு அனுப்பினான். இரட்டைக் குழந்தைகள் பிறந்த பிறகு, சீதையை அழைத்து வந்து மற்றொரு முறை பரிட்சிக்க வேண்டும் என்று சொன்னார் இராமர். தன்னுடைய இராஜ்ஜியத்திற்கு வாரிசு வேண்டும். இப்படி இராமருக்கு தன் மனைவியை விட தன்னுடைய கௌரவம் தான் முக்கியம் என்று நினைத்ததால் அதற்காக எதுவேண்டுமனாலும் செய்வார். இங்கு தான் சீதை எத்தனையோ வடிவங்களில் சிந்தித்து இறுதியில் கணவன் மனைவி உறவையே வெறுத்து தற்கொலை செய்துக் கொள்வாள். சீதையின் தற்கொலை இராமரின் ஆணாதிக்கத்திற்கு மிகப்பெரிய அடி. சீதை இறுதிக்கட்டத்தில் இராமரின் ஏமாற்றத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தற்கொலை செய்துக்கெண்டாலும், தன்னுடைய மனைவியை எத்தனை முறை வேண்டுமானாலும் ஒழுக்கப் பரிட்சை நடத்தலாம், அவமானப் படுத்தலாம் என்ற இராமரின் அகங்கார ஆதிக்கத்திற்கும் ஆணாதிக்க நீதிக்கும் தடை போட்டாள்.

இன்றுள்ள சமூகத்தில் நாம் காண்கின்ற இம்சைப்படுத்தும் கணவர்கள், சந்தேகத்தால் மனைவியை நாசமாக்கும். கணவர்களின் சுபாவங்கள் இராமாயணத்தில் உள்ள இராமர் பாத்திரத்தில் தாராளமாகக் காணலாம் இன்று தினம்தினம் நெருப்பில் செத்துக் கொண்டிருக்கும் பெண்களுக்கு அடையாளம் இந்த சீதைப் பாத்திரம். காலங்காலமாக கணவர்களின் அடிஉதைகளையும், சந்தேகமான கொடூரமான சம்பவங்களையும் வெறுத்துத் தற்கொலை செய்துக் கொண்டிருக்கின்ற இந்த தலைமுறைப் பெண்களுக்கு அடையாளம் அந்தத் தலைமுறை சீதை. அன்றுள்ள சீதைப் பாத்திரம் சூழல்களுக்கு அனுகூலமாக வேறு வழியின்றி தந்தைவழி கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தியது. அதனால் தான் அன்றுள்ள மதப் பெரியவர் களின், அரசர்களின் பாராட்டைப் பெற்று, மகாபதிவிரதை, பொறுமையானவள் என்ற பட்டங்களை பெற்றிருந்தாள்.

எந்த விதக் கட்டுப்பாடும் சம்பிரதாயங்களும் இல்லாத தாய் வழிச் சமூகத்திலுள்ள ஆதிவாசிப் பெண்தான் தாடாகை என்ற பெண் விவசாயத்தைச் சார்ந்தும், காட்டுக்குள் நிம்மதியான வாழ்க்கையை



படிப்பகம்

www.padippakam.com

நடத்துபவள் இந்தத் தாடகை. இவளுக்கு வேட்டையாடவும், தெரியும் யுத்தம் செய்யவும் தெரியும் இவளுக்கு இரண்டு குழந்தைகள். இவளின் பிரதானப் பிரச்சனை என்ன என்று பார்ப்போமேயானால் நிலப்பிரச் சனைதான்.

நாம் தாடகை பெண் பாத்திரத்தை புரிந்துக் கொள்ளும் முன்பு அன்றிருந்த ஆதிவாசிகள் பிரச்சனைகளைப் பரிசீலிப்போம். அன்றிருந்த ஆதிவாசிகள் பிரதானமாக உணவுசேகரித்தலைச் சார்ந்து, காட்டுக்குள் நிலங்களைச் சரிசெய்து விவசாயம் செய்துவந்தனர். விலங்குகளை வேட்டையாடி, காடுகளில் இயற்கையாக கிடைக்கும் கிழங்கு, காய்கறி, தேன், பழங்கள் போன்றவற்றை உண்டு, சண்டையின்றி சுயேச்சையாக வாழ்ந்தனர்.

பார்ப்பனர்களையும், அரசர்களையும் எதிர்ப்பதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று பார்ப்பனர்கள் ஆசிரமங்களின் பெயரில் காடுகளில் விவசாயப் பகுதிகளை உருவாவதற்கு முன்பு யாகங்களின் பெயரில் காட்டைத் தீவைத்து எரித்தார்கள். இரண்டாவது பார்ப்பனர்களுக்கு அந்தந்த நாட்டில் அரசர்கள் காணிக்கையாக கொடுத்த பசுக்கள் நிறைவாக இருந்தன. காடுகளில் இப்பசுக்களின் உணவிற்கு ஆசிரமத்திலுள்ள தன்னுடைய சீடர்களை சுற்று வட்டாரத் திற்கு அனுப்புவர். அப்படிப் போகும்போது ஆதிவாசிகளின் விவசாயப் பகுதிகளில் இருந்த பயிரை பசுக்களுக்கு உணவாக எடுத்துக் கொண்டு நாசப்படுத்தியது. இப்படி பல வகைகளில் காடுகளை நாசப்படுத்தியும் தங்களின் உணவுப் பொருள்களையும் தம் கண்முன்னே நாசமாக்கப் படுவதாலும், கஷ்டப்பட்டு விளைவித்த பயிர்களெல்லாம் தம்கண் எதிரிலேயே துவம்சம் செய்வதாலும், ஆசிரமங்கள் என்ற பெயரில் பார்ப்பனர்கள் காடுகள் ஆக்ரமித்ததால், இயல்பில் பொறுமையான ஆதிவாசிகள், தங்களின் வாழ்க்கையைச் சின்னாபின்னமாக்கும் பார்ப்பனர்களின் மேல் விலங்குகளின் சடலங்களாலும், மாமிசத்தாலும், ரத்தத்தாலும், முரட்டு ஆயுதங்களாலும் தாக்கினர்.

எந்த நிலத்தை ஆக்ரமித்தாலும் அதற்கு அரசர்களின் அனுமதி தேவை. இராமாயணத்திலுள்ள பார்ப்பனர்கள் ஏதோவொரு அரசனின் உதவியுடன் நிலங்களை ஆக்ரமித்து ஆதிவாசிகளைக் கொல்ல முயன்றனர். இப்படித்தான் விஸ்வாமித்திரர் என்ற முனிவர் தசரத அரசனின் உதவியோடு தாடகையைக் கொல்வதற்கு இராமரை அனுப்பிக் கோருவார். தாடகை இருக்கின்ற வனத்துக்குள் பார்ப்பனர்கள் போய் நிலங்களை ஆக்ரமித்து, ஆசிரமங்களைக் கட்டி அவளையும், அவளின் இரு குழந்தைகளையும் காட்டைவிட்டு விரட்டிவிட்டனர். தங்களை விரட்டிய பார்ப்பனர்களைப் பழிவாங்கு வதற்காக விலங்கு



படிப்பகம்

www.padippakam.com

மாமிசத்தையும், எலும்புத் துண்டகளையும் வீசி, விலங்குகளின் ரத்தத்தையும் சிந்தி முனிவர்களை காயப்படுத்தி யாகங்களை குழப்பி விட்டனர். தாடகை உபயோகிக்கும் ஆயுதங்கள் கரடு முரடானவை. இராமரின் வில்லும், பாணமும் அன்று புதுமையான திறமைபெற்ற ஆயுதங்கள் தாடகைக்கும், இராமருக்கும் நடந்த யுத்தத்தில் இறுதி வரையில் போராடி இராமரின் வில்லுக்கு பலியானாள். இப்படி சுரண்டும் வர்க்கங்களின் (பார்ப்பனர்கள் மற்றும் அரசர்கள்) சுரண்டலுக்கும், அடக்கு முறைக்கும்பலியானார் தாடகை. மிகவும்வீரமாக நிலத்துக்காக வும் தங்களின் உணவு உரிமைக்காகவும் பார்பன ஆதிக்கத்தையும், அரசை எதிர்த்தும் இடையறாது போராடினாள்.

இப்படிப்பட்ட தாடகையின் பாத்திரத்தை பயங்கரமானதாகவும், இராட்சசதனமாகவும், மோசமானதாகவும், சித்தரிப்பதன் மூலமாக அன்றைய சமூகத்திலுள்ள மத வெறியர்களுக்கும், அரசர்களுக்கும் ஆதிவாசிகளைப்பற்றி சுரண்டப்படுவோர் வர்க்கத்தைப்பற்றி இருக்கின்ற புரிதலையும், சுபாவங்களையும் புரிந்துக் கொள்ளலாம். சுரண்டும் வர்க்கம் எதுவானாலும் சரி, சுரண்டப்படுபவரை இறுதியில் ஆயுதங்களால்தான் அடக்குவர் என்பதற்கு தாடகை ஒரு உதாரணம். தாடகையின் பாத்திரம் அன்றிருந்த சூழலுக்கு ஏற்பத்தான் இருந்தது.

இறுதியாக சூர்பனகை என்ற பெண் பாத்திரம் எந்தவித கட்டுப்பாடும் இல்லாத சுதந்தரமாய் வாழ்கின்ற சமூகத்தைச் சேர்ந்த ஆதிவாசிப் பெண். காடுகளில் சுயேச்சையாக இருந்து எந்தவித மறுப்பும்இல்லாமல் தன்னுடைய கருத்துகளை மற்றவர்களுக்கு சொல்லும் தன்மைக் கொண்டவள். இவள் இராமனைப் பார்த்து மனதைத் தழுவி, திருமணம் செய்துக் கொள்ள தன் விருப்பத்தை இராமருக்கு தெரிவித்தாள். கபட புத்திக் கொண்ட இராமர் இவளை தன் தம்பி இலஷ்மணனை மணம் செய்து கொள்ளுமாறு சொல்லி அனுப்புகிறார். இலஷ்மணனும் மீண்டும் அவளை இராமரையே மணம் செய்துக் கொள்ளச் சொல்லி அனுப்புவார். இப்படி இராம, இலஷ்மணர்கள் தன் மானத்தைக் கொண்ட ஆதிவாசிப் பெண்ணை கேலி செய்து அவமானப் படுத்தினர். இராமர் தனக்குப் பிடிக்கவில்லை என்றால் சூர்ப்பனகையிடம் சொல்லி இருக்கலாம். அதற்கு மாறாக இலஷ்மணனிடம் சொல்லி காதும், மூக்கும் அறுத்துவிட்டான். சுரண்டப்படும் வர்க்கங்களின் மீது, கடினமாகத் துன்புறுத்தி சந்தோஷப்படும் இன்றைய சுரண்டும்வர்க்கங் களின் தன்மை அன்றிருந்த இராமயணத்தில் இராமரிடம் தெளிவாகக் காணலாம்.

**இராமவிஜயம் மக்க**ளின் நன்மைக்காக அல்ல. பார்ப்பனர்கள் மற்றும் அரசர்களின் **நன்**மைக்காத்தான். சுரண்டப்படும் வர்க்கத்தின் மீது



படிப்பகம்

www.padippakam.com

கொடூரமான ஆட்சி நடத்தியது, நாட்டிலுள்ள ஆண்களுக்கு இராமர் ஆதர்சமானவர் என்றும். இராமராஜ்ஜியம் தான் தேவை என்றும், தந்தைவழிப் பண்பாட்டை பலப்படுத்துவதற்கு, பதிவிரதச் சூத்திரங் களால் பெண்களை கொடூரமாக அடக்கி சிலுவையில் போட்டு, உடன் கட்டை ஏற்றிக் கொல்வதற்குக் கங்கணம் கட்டி, இந்துமத வெறியர்கள் மற்றும் ஆட்சியாளர்கள் செய்கின்ற பிரச்சாரத்தை எதிர்த்து, அவற்றைத் தோற்கடிக்க அனைத்துச் சுரண்டப்படும் மக்களுடன் ஒன்று சேர்ந்து போராடுவதுதான் ஜனநாயகவாதிகளின், பெண்கள் அமைப்புகளின் பிரதானக் கடமைகளில் ஒன்று என்று அடையாளம் காண வேண்டும்.

**-மகிளா மார்க்கத்தின் தமிழாக்கம்**

## சர்வதேச உழைக்கும் பெண்கள் தினக் கூட்டம்



*சென்னையில் த.பெ.க 6.3.99 அன்று சர்வதேச உழைக்கும் பெண்கள் தினத்தை ஒட்டி திருவல்லிக்கேணியில் வேமுரு ராவ் பகதூர் ரங்கநாதன் அறக்கட்டளையில் அறைக்கூட்டத்தை நடத்தியது. கூட்டத்திற்கு தோழர். ஜெனியா தலைமை தாங்கினார். 'சமூக சீரழிவும் அதன் தாக்கமும்' என்ற தலைப்பில் பேசிய பேராசிரியர். சாலினி இளந்தறியன், சீரழிவு என்று ஏன் குறிப்பிடுகின்றோம்; சீரழிவால் சமூகத்தின் மீதான தாக்கத்தைப் பற்றி பேசினார். 'இந்து மத பாசிசமும் அதன் ஒடுக்குமுறையும்' என்ற தலைப்பில் பேசிய பேராசிரியர். சுதந்திர முத்து பி.ஜே.பி. ஆட்சியின் இந்துமத வெறியையும், பாசிச தன்மையின் தாக்கல்களையும் பற்றி விளக்கினார். சர்வதேச உழைக்கும் பெண்கள் தினத்தின் போராட்ட பின்னணியையும், தற்போது இந்தியாவில் ஏனைய பெண்கள் அமைப்புகளும், அரசியல்வாதிகளும் மார்ச் - 8 தினத்தை சடங்கு தினமாக அனுசரிப்பதையும் உழைக்கும் பெண்கள் மற்றும் மக்களின் வாழ்வை நாசமாக்கிவரும் புதிய பொருளாதார கொள்கையையும் இந்து மத பாசிசத்தையும் எதிர்த்து சபதமேற்க வேண்டிய அவசியத்தையும் பற்றி தோழர் அஜிதா பேசினார். இடையிடையே உணர்வுபூர்வமான எழுச்சிமிகு கலைநிகழ்ச்சிகள் நடந்தது.*

*மதுரை - சர்வதேச உழைக்கும் பெண்கள் தினத்தை ஒட்டி துண்டறிக்கை போஸ்டர் போடப்பட்டது.*



படிப்பகம்

www.padippakam.com

# ஜீன்ஸ்

அண்மையில் இத்தாலியில் 45- வயது வாகன பயிற்சியாளன் தன் 18 வயது மாணவியை பாலியல் வன்முறைக்கு இரையாக்கியுள்ளான். கீழ் நீதிமன்றம் 2 ஆண்டு 10 மாதங்கள் சிறை தண்டனை அளித்தது. இத்தாலியின் உச்சநீதிமன்றமோ தீர்ப்பை மாற்றி, "ஒருவர் அணிந்திருக்கும் ஜீன்ஸை அவருடைய முழு உதவியின்றி கழற்றுவது கடினம் என்பது பொது அறிவே. அதிலும் அவர் எதிர்த்தால் கழற்றுவது சாத்தியமில்லை' என்று தீர்ப்பை கூறி பயிற்சியாளனை நிரபராதியென அறிவித்தது.

இத்தீர்ப்பை எதிர்த்து இத்தாலியில், பிறகு உலகெங்கும் வக்கீல்கள், நீதிபதிகள், அரசியல்வாதிகள் மற்றும் இதர தொழில் துறைப் பெண்கள் கண்டனம் தெரிவித்தனர். இத்தாலிய பாராளுமன்றத்தில் 6 பெண் உறுப்பினர்கள். பாராளுமன்ற கீழ்சபையில் ஆர்ப்பரித்தனர். கலிபோர்னியாவில் பெண் சட்டமியற்றுநர்கள் சட்ட பேரவைக்கு ஜீன்ஸ் அணிந்துக் கொண்டு சென்று தன் கண்டனத்தை தெரிவித்தனர்.

நம் நாட்டில் இதற்கான எதிர்ப்பு மறுமொழி பலமாக இல்லை. கற்பழிப்புக்கு தூக்குதண்டனை என்று இந்தியாவில் வந்த பேச்சு என்னவாயிற்று? இத்தகைய வழக்கத்திற்கு மாறான சட்டங்கள் நம்மிடமிருந்து பெரும் தொலைவிலே உள்ளது.

இதற்கிடையில் உலகமே பின்னோக்கித்தான் நடைபோட்டுக் கொண்டிருக்கிறது.

உலகெங்குமே ஆணாதிக்க சிந்தனையாளர்களின் மனம், ஒரே மாதிரித்தான் உள்ளது என்பதை இந்த இத்தாலியத் தீர்ப்பு நிச்சயப்படுத்துகிறது.

[பிஸினஸ் லைனில் வந்த செய்தியின் தமிழாக்கம்]

-ஆர்த்தி.

---

பெண்களின் சமூக விழிப்புணர்வையும், அவர்கள் சமூக வேலைகளில் ஈடுபடுவதையும் நாம் வளர்த்தெடுக்க வேண்டும். அதன் மூலமாக அவர்கள் குறுகிய கண்ணோட்டத்திலிருந்து வெளிவருவதற்கும், என் வீடு, என் குடும்பம் என்கின்ற தனியுடமை அறிவு, சிந்தனையிலிருந்தும் வெளிவர உதவ வேண்டும். - லெனின்



படிப்பகம்

www.padippakam.com

# ஆடுவோமே .... பள்ளு பாடுவோமே ...

ஆல் இண்டியா ரேடியோ ... சென்னை வானொலி நிலையம் ... செய்திகள் வாசிப்பது ... சந்தியா ... நேரம் இப்பொழுது எட்டு மணி பதினைந்து நிமிடம் பத்து நொடி.-

நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவுடைந்துள்ளது. என விவசாயத்துறை அமைச்சர் பொன்விழாக் கொண்டாட்டங்களை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு நிகழ்ச்சியில் கூறியுள்ளார். அந்நிகழ்ச்சியில் கலந்துக் கொண்ட பிரதமர் வாஜ்பேயி, மக்களின் சுதந்திரத்தையும் உரிமைகளையும் உத்ரவாதம் செய்யும் இந்திய சனநாயகத்தைப் பாதுகாக்க அனைவரும் சபதமேற்க வேண்டும் மென்று கூறினார். மேலும், சமூகத்தின் அமைதியை சீர் குலைக்க முனையும் பிரிவினைவாத சக்திகள் செயல்படுவதற்கு சந்தர்ப்பம் அளிக்காத வண்ணம் விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் அனைத்து அடிப்படை உரிமை களையும் இப்பொன்விழா ஆண்டில் அரசு உறுதி செய்யும் எனவும் கூறினார்.

* * * * *

இன்று சர்வதேச மனித உரிமைகள் தினம்! இத்தினத்தை சிறப்பிக்க பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன தலைநகரில் இன்று தலைவர்கள் பங்கேற்கும் வண்ணமயமான விழாக்கள் பல நடைபெற உள்ளன. சமூகநலத்துறை ஏற்பாடு செய்திருக்கும் கருத்தரங்கும், பள்ளிக் குழந்தைகள் கலந்துக் கொள்ளும் பேரணி ஒன்றும் நடைபெற இருக்கின்றன.

* * * * *

உத்திரபிரதேசத்தில் 331 காவல் நிலைய கற்பழிப்புகளும், 228 காவல் நிலைய கொலைகளும் நடந்துள்ளதாக உள் துறை அமைச் சகத்தின் தேசிய குற்றவியல் ஆவண அறிக்கை தெரிவிக்கின்றது. மேலும் ராஜ்ய சபையின் உள்துறை அமைச்சகம் 1998 -ம்ஆண்டு மட்டும் டெல்லி, மும்பாய், கல்கத்தா, சென்னை மாநகரங்களில் நடத்திய குற்றவியல் வழக்குகளை பற்றிய கீழ்காணும் புள்ளிவிவரத்தை வெளி யிட்டுள்ளது.

| | திருட்டு | கொள்ளை | கொலை | கற்பழிப்பு | ஏமாற்றல் | கடத்தல் |
|---|---|---|---|---|---|---|
| டெல்லி | 26.911 | 823 | 649 | 438 | 1.817 | 1.333 |
| மும்பாய் | 12.400 | 510 | 351 | 115 | 1.089 | 179 |
| கல்கத்தா | 4.041 | 147 | 80 | 25 | 687 | 117 |
| சென்னை | 1.196 | 53 | 36 | 5 | 308 | 15 |



படிப்பகம்

www.padippakam.com

ஒட்டுமொத்தமாக, டெல்லியில் - 32,016, மும்பாய - 14,644, கல்கத்தாவில் - 5,097, சென்னையில் - 1,613 கிரிமினல் வழக்குகள் பதிவாகியுள்ளதாக உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

* * * * *

இருபத்தைந்து வயதான பழங்குடி சார்ந்த பெண்ணொருத்தி, குஜராத்திலுள்ள வதோதரா (ரூரல்) போலீஸ் நிலையத்தின் கட்டுப்பாட்டு அதிகாரியால் கொடூரமான சித்ரவதைக்கு ஆளாக்கப்பட்டுள்ளார். தற்போது தீக்காயங்களுக்காக மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுவரும் இப்பெண்ணை நான்கு போலீஸ்காரர்கள் தனது கைகளை அறையின் ஜன்னல் கம்பிகளோடு கட்டிவைத்த பின் நிலைய கட்டுப்பாட்டு அதிகாரி தன்னை நிர்வாணப்படுத்தி அடித்து நொறுக்கி, இரண்டு முறை பாலியல் வன்முறை செய்ததாகவும், பின்பு மெழுகு வர்த்தியில் தனது பிறப்புறுப்பைத் தீ வைத்தாகவும் புகார் செய்திருக்கிறார். சம்பவம் நடந்த அன்றே மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் இப்பெண் அனுமதிக்கபட்டார் - பணியிலிருந்த மருத்துவர் உடனடியாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தபோதும், ஒரு வாரத்துக்குப் பிறகே இக்குற்றம் பதிவு செய்யப்பட்டது.

* * * * *

ஒரிசா மாநிலத்தின் கொராபுட் காலஹண்டி, பாலங்கீர் மாவட்டங்களில் பல ஆண்டுகளாக பட்டினிச்சாவுகள் நிகழ்ந்து வருகின்றது. சென்ற ஆண்டுகளை விட பலமடங்கு பட்டினிச் சாவுகள் அதிகமாகி மக்களின் துயரங்கள் பெருகிவிட்ட நிலையில், இப்பகுதிகளில் வேலைவாய்ப்புக்கான மாற்று வழிகளை உருவாக்கியது பற்றி எந்தவொரு முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. நிவாரணப் பணிக்கான திட்டங்களை அரசு மேற்கொள்ள வேண்டுமென சர்வதேச அமைப்புகள் கோரியுள்ளன. பிஹார் மாநிலத்தின் பால மேளவ், மேற்கு வங்கத்தின் மிட்னுபூர் ஆகிய மாவட்டங்களிலும் பட்டினிச்சாவுகள் அறிவிக்கப் பட்டுள்ளன. தெற்கே ஆந்திரத்திலும், கர்நாடகத்திலும் போதிய விளைச்சலின்றி, கடன் தொல்லை தாளாமல் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு இறப்பது அதிகரித்து வருகிறது.

* * * * *

சாதிகளை ஒழித்து, சாதிமத பேதமற்ற சமத்துவ சமுதாயம் அமைத்து, மக்களை முன்னேற்றப் பாதையில் அழைத்து செல்ல தமிழ்நாட்டில் 7,8 மற்றும் 9 ஆவது சமத்துவ புரங்கள் திறக்கப்பட்டன. இதையொட்டி பெரியார் பல்கலைக்கழகக் கட்டிடத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. பின்பு நல திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

* * * * *

புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர் வட்டம் தென்னலூர் கிராமத்தில் கலப்புத் திருமணம் செய்து கொண்ட தலித் இளைஞர்கள் மூன்று



படிப்பகம்

www.padippakam.com

பேரை, இரவெல்லாம் கட்டி வைத்து அடித்து துன்புறுத்தி பின்பு மொட்டையடித்து, ஆடைகளைக் களைந்து நிர்வாணமாக்கி, கரும்புள்ளி, செம்புள்ளி குத்தி, கைகால்களை கட்டி உருட்டி விட்டு வெறித்தனமாக தாக்கியிருக்கின்றனர். மேல்சாதி இந்துக்கள் கலப்புத் திருமணம் செய்த தலித்துகளுக்கு பாடம் கற்பிக்க கிராமத்தின் பஞ்சாயத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை இது.

* * * * *

ஆந்திராவில் எலுரு நகரைப் போல ராஜஸ்தானில் பல மாவட்டங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த பெண்களை சர்வசாதரணமாக விற்கிறார்கள். வாங்குகிறார்கள். போலிசும், பஞ்சாயத்தும் கண்டு கொள்வதில்லை. இந்தப் பெண்களின் விலையை நிர்ணயிப்பதே பஞ்சாயத்துகள் தான். இதுவரை நூற்றுக்கணக்கானப் பெண்கள் அவர்களது கணவர்களாலும், பெற்றோர்களாலும் விற்கப் பட்டுள்ளனர். இந்த அராஜகமான விசயத்தில் நம்பமுடியாத ஒரு விசயம், இதற்கு சமூக அங்கீகாரம் இருப்பது தான்.

* * * * *

போபால்நகரில் விஷவாயுக் கசிவு ஏற்பட்டு பதினான்கு ஆண்டுகள் முடிவடைந்துவிட்டன. 1984 ஆம் ஆண்டு டிசம்பர் 2,3 தேதிகளில் யூனியன் கர்பைட் நிறுவனத்தின் பூச்சிக் கொல்லி மருந்துஆலையிலிருந்து விஷவாயுக் கசிவு ஏற்பட்டதால் பாதிக்கப்பட்ட மக்களின், பெரும்பான்மை யோருக்கு நிவராணத் தொகையோ, போதிய மருத்துவ வசதியோ இன்று வரை கிடைக்கவில்லை. 1984 - ல் இவ்வழக்கில் கார்பைடு நிறுவனம் 470 மில்லியன் டாலர் தொகையை நஷ்டஈடாக அளிக்க வேண்டுமென உச்சநீதிமன்றம் ஆணையிட்டது. இதில்வெறும் 1032.80 கோடி மட்டுமே இதுவரை நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. விஷவாயுக்கசிவால் பல்வேறு நோய்களுக்கு ஆளாகியிருக்கும் மக்களுக்கு சிகிச்சைஅளிக்க ஏற்படுத்தப்பட்ட மருத்துவமனைகளில் தேவையான மருந்துகளும் இல்லை, மருத்துவர்களும் இல்லை.

* * * * *

ஆந்திர மாநிலம் நலகொண்டா மாவட்டத்தில் பெண் குழந்தைகள் விற்கப்படுகின்றார். பெரும்பான்மையாக லம்பாடி பழங்குடி வகுப்பை சார்ந்த வறுமை குடும்பங்களிலுள்ள பிறந்த குழந்தை முதல் இரண்டு வயது வரை உள்ள பெண் குழந்தைகளை 'சமூக சேவர்கள்' குறைந்த விலைக்கு வாங்கி ஆஸ்திரேலியா, ஜெர்மனி, அமெரிக்கா, நார்வே, ஸ்பெயின்ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துவிடுகிறார்கள். ஒரு குழந்தையின் விலை அதிகபட்சமாக ரூ.1500/- காந்திநகரிலுள்ள 'ஆக்ஷன் சோசியல் டெவலப்மென்ட் (ASD) நிறுவனம் 1991 முதல் இதுவரை 124 குழந்தைகளை ஏற்றுமதி செய்துள்ளது. GSESWA என்ற நிறுவனம் 10 குழந்தைகளை அமெரிக்கா, பெல்ஜியம், இங்கிலாந்து போன்ற



படிப்பகம்

www.padippakam.com

நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளது. சரியான எண்ணிக்கை இதை விட அதிகமாக இருக்கும் என்று அஞ்சப்படுகின்றது. கிரி என்ற லம்பாடி பெண் ஏதேச்சையாக ஹைதராபாத்தில் போலிஸிடம் ஒரு குறிப்பிட்ட நிறுவனத்திற்கு மூன்று பெண் குழந்தைகளை வாங்கித் தர தான் உதவியதாக தெரிவித்த போது தான் இந்த குழந்தை வியாபாரம் வெளிவந்துள்ளது. இதன் அடிப்படையில் மேற்சொன்ன ASD,GSESWA நிறுவனங்களில் சோதனை செய்த போது ஏற்றுமதிக்காக சேகரித்து வைக்கப்பட்டிருந்த முறையே 172 குழந்தைகளும், 60 குழந்தைகளும் கைப்பற்றப்பட்டன. சித்தூர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் செயலாளரான சுப்பையா இந்த குழந்தை வியாபாரத்தில் முக்கிய பங்காற்றியுள்தாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்துடன் செய்திகள் நிறைவடைந்தது.

ஆல் இண்டியா ரேடியோ .... சென்னை வானொலி நிலையம் .... திரைகானம் நிகழ்ச்சியின் முதல் பாடல் .... பாரதியார் பாடல் கேட்கலாம்!

எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு
நாம் எல்லோரும் சமமென்பது உறுதியாச்சு
சங்குகொண்டே வெற்றி ஊதுவோமே ...
இதைதரணிக்கெல்லாம் எடுத்து ஓதுவோமே
ஆடுவோம் ... ஆடுவோம் ... ஆடுவோமே ...

-அமரந்தா

## பெண்ணே...!

- மகாலட்சுமி
கோவை

சாம்பாரும் கூட்டுமா?
உன் வாழ்க்கை?
சுதாலும்
கல்யாணமுமா
உன் கொள்கை?
குழந்தையும்
கணவனுமா
உன் லட்சியம்?
விடுதலைப் பொன்விழா
கண்டாலும் உன்
விடுதலையை காண
முடியவில்லையே ஏன்?
பெண்ணே ....?
வெகுண்டு எழு!
இளைய பாரதம்
உன்கென
காத்திருக்கு.

- நன்றி "மாலை மலர்"



படிப்பகம்

www.padippakam.com

## வாசகர் கடிதம்

வாசகர்களிடமிருந்து கடிதங்கள் தாமதமாகக் கிடைக்கப் பெற்றதனால், மே—அக்டோபர் '98: நவ—டிசம்பர் '98 இதழ்களின் மீதான வாசகர்களின் கருத்துக்களை இந்த இதழில் வெளியிடுகின்றோம். மேலும், ஜன—பிப்ரவரி '99 இதழுக்கான கருத்துக்கள் வந்த வண்ணமாக இருப்பதனால், ஒட்டு மொத்தமாக அடுத்த இதழில் வெளியிடுகின்றோம் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம். — ஆசிரியர் குழு.

மே — அக்டோபர் '98

அடிமைக் கருத்துக்களை ஏற்று வாழப் பழகிப் போன பெண்கள் அறிவியல் ரீதியில் விழிப்புணர்வு பெற்றாலும் நடைமுறையில் வரம்புகளை தாண்டிச் செல்ல தயாரில்லை அல்லது முடிவதில்லை என்பதற்கு ''அம்மாவுக்கு மட்டுமா வீட்டு வேலை'' என்ற கலந்துரையாடல் ஓர் உதாரணம்.

— கனல், வேலூர்

'பெண் உரிமைக்காக' என்ற தலைப்பின் கீழ் எழுதப்பெற்ற கருத்துக்களில் வரலாற்று ரீதியில் பெண்கள் போர்க்கொடி உயர்த்தியதால் நிமிர்ந்து நின்ற பங்கினை வெளிக்கொணரவில்லை...

'இராஜஸ்தானில் பெண்கள் மீது ஆட்சியாளர்கள் கொடுமை' இக்கட்டுரையில் முடிவில் 'விஷப்பண்பாடு' என எதைக் குறிப்பிடுகிறோம். தெளிவுபடுத்தவில்லை. — கோபால், கல்பாக்கம்

சுதந்திர இந்தியாவின் உண்மை முகத்தை தோலுரித்து காட்டுவதே தான் இக்கட்டுரையின் நோக்கம் என்பதால், பெண்களின் வரலாற்று பங்களிப்பை குறிப்பிடவில்லை. விஷப்பண்பாடு என்று சமீபத்தில் அதிவேகமாக வளர்ந்து வரும் மேலை நாட்டு ஆபாச பண்பாட்டையே குறிப்பிடுகின்றோம்.

— ஆசிரியர் குழு.

நவ — டிச '98

நவ— டிச 98 'பெண் உரிமை' இதழில் செல்வி என்பவர் எழுதிய 'என் திருமணம்' எனக்கு மிகமிகப் பிடித்திருந்தது. இன்றைய அப்பா, அம்மா, பெண் இவர்கள் மூவர்நிலையிலும் ஆராய்ந்து உண்மைகளை விளக்கிய அவர் இறுதியாகத் திருமணம் என்பதற்கு அளிக்கும் விளக்கம் அருமை.

— ஆனந்தி, சென்னை.

'பெண் உரிமை' நவ—டிச '98 இதழில் தலையங்கம் அற்புதம். ஜென்னியின் வாழ்க்கை வரலாறு சிறப்புடன் விளங்கியது. காஷ்மீர் தேசிய இன விடுதலைப் போரும் பெண்கள் மீதான ஒடுக்கு முறையும் என்ற கட்டுரை மிகவும் அருமை. — தங்க சங்கரபாண்டியன், சென்னை.

நண்பர்களே!
மேலும் அதிக விமர்சன கடிதங்களை எழுதி இதழின் வளர்ச்சிக்கு உதவுங்கள்!
கதை, கட்டுரை, கவிதை போன்றப் படைப்புகளையும் அனுப்பி வையுங்கள்!

— ஆசிரியர் குழு.



இந்த இதழ் தவிர்க்கமுடியாதக் காரணத்தால் தாமதமாக வெளிவருகின்றது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். —ஆசிரியர் குழு

படிப்பகம்

www.padippakam.com

# இட்டலி மகிமை...

– சாலய் இளந்திரையன்

குறைந்த உழைப்பு, நிறைந்த பயன்
இதுதான் வேலையின் தத்துவம்;
அதாவது,
அறிவாளிகளின் வேலைத் தத்துவம்...
இங்கேயோ
வேலை கொடுத்தார்கள் வீட்டுப் பெண்களுக்கு
இடுப்பை முறித்தார்கள், எவ்வளவுப் பயனுக்கு
ஊறுகாய்ச் சகிதம் ஒருவேளைச் சாப்பாடு
சமைத்து முடிக்க நமது பெண்கள்
மூன்று மணி நேரம் குமைந்திட வேண்டும்
மறுஉலக இன்பங்கள் வகையாக வந்தடைய
வழிவகைகள் கண்ட மாபெரிய மேதைகள்—
விடுதலை என்னும் வீடு தேடிட
விரிந்த வழிகள் கண்ட சாமிகள் –
சாம்பார் ரசத்தில் - தயிரில்
ஒருகுறை இன்றி உண்டிருந்தார்கள்
அந்த வேலைக்கு இத்தனை நேரம்
அழுது தொலைக்கும் அப்பாவிப் பெண்கள்
விடுதலை அடையத்தான் வழிகண்டாரில்லை...
முழுச் சாப்பாட்டுப் பேச்சை விடுங்கள்;
அரையோ காலோ அல்லாத
காலை சிற்றுண்டிக்காக
எங்கள் பெண்களுக்கு இரண்டு நாள் வேலை;
இல்லையோ,
இலையில் வாராது இட்டலி
ஊற வைப்பதும்
உருட்டுக் கல்லிலே ஆட்டி எடுப்பதும்
அவைகள் ஒருநாள்;
புளித்த மாவைப் பொன்போல் இட்டு
அவித்து எடுக்கும் அப்பணி மறுநாள்...
சொர்க்க நரகக் கணக்கு வல்லவர்
சோதாக்கள் அல்லர்;
தெரியாதத்தனமாய்ச் செய்திடவில்லை;
மங்கை மாதரை ஆட்டுக்கல்லில் மாட்டித்
திட்டம் வகுத்தே செய்துவைத்தார்கள்
இல்லை என்றால்
தமிழ்ச் சாப்பாட்டிலே
இட்டலி தோசைக்கு மட்டும்
ஏன்தான் இந்த மாபெரும் மகிமை ...

– நன்றி 'உரைவீச்சு'